Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MAY 19, 2022

வியாழக்கிழமை மே 19, 2022 | ஒளி: 07 கதிர்: 309 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

## சுடரேற்றி அஞ்சலி

யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவினர்களை நினைவுகூர்ந்து, வடக்கு,கிழக்கில் பரவலாக அஞ்சலி செலுத்தப்பட்டது. அதேபோல, காலி முகத்திடலிலும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.





யுத்த வெற்றியைக் கொண்டாடிய

# காலிமுகத்திடலில் சுடரேற்றி அஞ்சலி





முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, கொழும்பு, காலி முகத்திடலிலும் நேற்று (18) அனுஷ்டிக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்வோமென்ற கோஷத்தில், ‘கோட்டா கோ கம’ அமைக்கப்பட்டது. அங்கு போராட்டங்கள், எதிர்ப்பு பேரணிகள், பூஜை வழிபாடுகள், பேய்யோட்டுதல், காளி, மாடன் பூஜைகள், வெசாக் தோரணம் உள்ளிட்ட பல்வேறான நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

முள்ளிவாய்க்கால் முற்றம்

# கண்ணீரில் நனைந்தது

### நந்திக்கடலில் மலர் தூவி அஞ்சலி







சண்முகம் தவசீலன்

கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்ட தமிழின படுகொலையின் 13ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள், முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நேற்று (18) உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இறுதி யுத்தத்தில் தனது ஒரு கையை இழந்து பாதிக்கப்பட்ட ஒருவர், பொதுச்சுடர் ஏற்றியதை தொடர்ந்து, ஏனைய உறவுகளும் தமது உறவுகளை நினைவுகூர்ந்து சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இதன்போது முள்ளிவாய்க்கால் பிரகடனமும் வெளியிடப்பட்டது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது, முள்ளிவாய்க்காலில் மக்கள் பாரிய உணவு நெருக்கடிக்கு முகம் கொடுத்த வேளையில், அந்த மக்களது பசி போக்கிய, ‘முள்ளிவாய்க்கால் கஞ்சி’யும் பல்வேறு தரப்பினராலும் வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## பிரதமர் பதவியை ஏன் ஏற்றேன்?

பா.நிரோஸ்

ராஜபக்ஷர்களை காப்பாற்றவே நான் பிரதமர் பதவியை எடுத்தேன் என வெளிப்படையாக விமர்சிக்கின்றனர். நாட்டை பாதுகாப்பதற்காகவே நான் பிரதமராகியிருக்கிறேன், என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2



ஈழத் தமிழர்களின் பூர்வீக தாயகமாக

## வடக்கு-கிழக்கை அங்கிகரிக்கவும்

### முள்ளிவாய்க்காலில் பிரகடனம்

சண்முகம் தவசீலன்

ஈழத் தமிழர்களின் பூர்வீக தாயகமாக வடக்கு- கிழக்கை அங்கிகரிக்க வேண்டும் என முள்ளிவாய்க்காலில் நேற்று (18) வெளியிடப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது, முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்ட தமிழின படுகொலையின் 13ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் மிகவும் உணர்வெழுச்சியுடன் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. அத்துடன், முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## எரிவாயுக்கு 20 நாள்கள் தேவை

பா.நிரோஸ்



நாளொன்றுக்கு 80 ஆயிரம் சிலிண்டர்களை மாத்திரமே விநியோகிக்க முடியும் என்பதால், சமையல் எரிவாயு விநியோக செயற்பாடுகள் வழமைக்கு திரும்புவதற்கு சுமார் 20 நாள்கள் செல்லுமென வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார். சமையல் எரிவாயு தட்டுப்பாடு தொடர்பில் எதிர்க்கட்சியினரின் கேள்விக்கு பதிலளிக்கும் போது கூறிய அவர், எரிவாயுவை ஏற்றிக்கொண்டு நாட்டுக்கு வரும் இரண்டு கப்பல்களுக்கு தேவையான நிதி செலுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## இலங்கையை சர்வதேச நீதிமன்றுக்கு பரிந்துரைக்க வேண்டும்

### பிரித்தானிய தொழிற்கட்சி தலைவர் கெய்ர் ஸ்டார்மர்



இழந்தவர்களை நினைவுகூரும் போது இது நீதி, பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்தின் அவசியத்தை நினைவூட்டுவதாக இருக்கவேண்டும்.

தொடர்ச்சி P2

## கடனை செலுத்த முடியாத நிலையில் நிற்கின்றோம்



பா.நிரோஷ்

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக கடனை மீளச் செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா சபையில் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று (18) நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை தொடர்பில் கருத்து வெளியிட்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

ஒட்டுமொத்த தேசமும்

## மோதலின் முடிவை 2009 மே.18 கொண்டாடியது



தனிநாடு கோரி, கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக போராடி வந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில், இலங்கை வெற்றி பெற்றதையடுத்து, மூன்று தசாப்த கால மோதலின் முடிவை ஒட்டுமொத்த தேசமும் மே 18, 2009 அன்று கொண்டாடியது.

தொடர்ச்சி P2

# ராஜீவ் கொலை வழக்கில் பேறறிவாளன் விடுதலை

‘வரலாற்று தீர்ப்பு’
–முதலமைச்சர் ஸ்டாலின்

‘தீர்ப்பை விமர்சிக்க விரும்பவில்லை”
–அழகிரி

‘6 பேரின் விடுதலைக்கான ஆணையை பெறவும்”
–ராமதாஸ்

‘ஒரு தாயின் அறப்போர் வென்றது”
–திருமாவளவன்

‘நிமிர்ந்த தீர்ப்பு”
–கவிஞர் வைரமுத்து

‘மகிழ்ச்சி தருகிறது”
–வைகோ



முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில், மரண தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் ஆயுள் தண்டனை கைதியாக, 31 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்துவந்த, பேரறிவாளன், இந்திய உச்சநீதிமன்றத்தால் நேற்று (18) விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

முழுச் செய்தி P7



## யாழ். இளைஞர்கள் மூவர் விபத்தில் பலி

எம்.றொசாந்த், வி.நிதர்ஷன்

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திருநெல்வேலி, இராமலிங்கம் வீதியில் பூங்கனிச்சோலைக்கு அருகில் நேற்று முன்தினம் (17) இரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தொன்றில் மூன்று இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

விலையை கட்டுப்படுத்தாவிடின்

## பேக்கரி, ஹோட்டல்கள் முடங்கும்

### கோதுமை மா விலை ரூ.35 ஆல் உயர்வு

ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலையை 35 ரூபாயால் அதிகரித்துள்ளதாக நாட்டிலுள்ள இரண்டு பிரதான மா விநியோகஸ்தர்கள், நேற்று (18) அறிவித்துள்ளனர்.

கோதுமை மாவின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், பேக்கரி உரிமையாளர்கள் தொழிலில் ஈடுபட முடியாமல் தவித்து வருவதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலையை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், அடுத்த வாரம் அனைத்து பேக்கரிகளும் ஹோட்டல்களும் சகல உற்பத்திகளையும் நிறுத்தும் என சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கோட்டாபய ஆட்சியில் தமிழர்களுக்கு விமோசனம் இல்லை

பா.நிரோஷ்



தமிழர்களின் இரத்தக்கறை படிந்த ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் இருக்கும் வரை, தமிழ் மக்களுக்கு எந்த விமோசனமும் கிடைக்காது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (18) இடம்பெற்ற, நாட்டில் ஏற்பட்ட வன்முறைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தொடர்ச்சி P2

# காலிமுகத்திடலில் சுடரேற்றி அஞ்சலி

இந்த காலிமுகத்திடல் போராட்டத்தில், இன,மத பேதங்களின்றி சகலரும் ஓரணியில் திரண்டு நிற்கின்றனர். இந்நிலையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் சுடரேற்றி நேற்று (18) அனுஷ்டிக்கப்பட்டது. விசேட மேடை அமைக்கப்பட்டு, சுடரேற்றப்பட்டது. அத்துடன், துயைப்பட்டிருந்த மலர்களை அங்கிருந்தவர்கள் காலி முகத்திடல் கடலில் போட்டனர்.

கடந்த 12 ஆம் திகதிமுதல் ஒருவாரமாக, 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' வடக்கு, கிழக்கில் வழங்கப்பட்டது. காலிமுகத்திடலிலும், 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' வழங்கப்பட்டமை சிறப்பு அம்சமாகும்.

2009ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதியன்று யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் ஆட்சி நிர்வாகத்தின் கீழ், காலி முகத்திடலில், இவ்வாறானதொரு நாளில் யுத்த வெற்றியே கொண்டாடப்பட்டது.

13 ஆண்டுகளுக்குப் பின்னர், வடக்கு, கிழக்குக்கு வெளியே, அதுவும் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக, 'முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்' அனுஷ்டிக்கப்பட்டது. இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கண்ணீரில் நனைந்தது

இதேவேளை, முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்காக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் நந்திக்கடலில் மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

## வடக்கு–கிழக்கை...

இந்நிகழ்வில் வடக்கு, கிழக்குக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பால் இங்கு வெளியிடப்பட்ட முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

'மே 18, எங்கள் தேசத்தின் மீது தொடர்ந்து வந்த சிங்கள அரசுகள் நிகழ்த்தி வருகின்ற இனவழிப்பின் பாரதூரத் தன்மையையும், அச்ச மூட்டும் அதன் பரிமாணத்தையும், அவற்றால் எங்களுக்கு ஏற்பட்ட தாங்கொணா இழப்புகளையும் நினைவு கூர்வதற்கான ஒரு நாள் மட்டுமல்ல.

எத்தனை துயரங்கள் வந்தாலும் அழுத்தங்கள் தரப்பட்டாலும் நாங்கள் தோற்றுப் போக மாட்டோம்; முள்ளிவாய்க்கால் எமது எழுச்சியின் முடிவல்ல எனப் பிரகடனம் செய்கின்ற ஒரு நாளுமாகும்.

இந்த நாளில் முள்ளிவாய்க்கால் மண்ணிலே வீழ்த்திட்ட பல இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களையும், தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தமது உயிர்களைத் தியாகம் செய்து விதையாகிப்போன மற்றும் தங்கள் எதிர்காலத்தை -வாழ்க்கையை எங்களுக்காக தியாகம் செய்து இன்று துன்பத்தில் வாடுகின்ற எங்கள் செல்வங்களையும் நினைந்து நாங்கள் கண்ணீர் சிந்துகின்றோம்.

முள்ளிவாய்க்காலைத் தொடர்ந்தும் அதனை ஒட்டிய நாட்களிலும் தாயகமெங்கும் பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்ட எங்கள் உறவுகளையும் நாங்கள் இந்த நேரத்தில் நினைவு கூருகின்றோம்.

இனவழிப்புக்கு எதிராக தமிழ் மக்கள் எதிர்ப்பை வெளிக்காட்டியபோது, உரிமைகளைக் கோரிய போது, சிங்கள அரசு வன்முறையை கையிலெடுத்தது. அரசின் அடக்குமுறைகள் அழித்தொழிப்புகளுக்குப் பாதுகாப்பாகத் தமிழர்களின் எதிர்ப்பு வடிவங்களும் காலத்துக்குக் காலம் பரிமாண வளர்ச்சியடைந்தது.

அத்தகைய வளர்ச்சிக்கு ஏற்ப அரசின் வன்முறைக் கொடூரங்களும் மிகையாக அதிகரிக்கத் தொடங்கியது. இதன் உச்சக்கட்டமாக 2009இல் முள்ளிவாய்க்காலில் ஒரு பாரிய இனப்படுகொலை தமிழ் மக்கள் மீது ராஜபக்ஷ தலைமை தாங்கிய அரசால் நடத்தி முடிக்கப்பட்டது.

அரசின் அந்த வெற்றி பௌத்த-சிங்கள மேலாதிக்க வெற்றியாக மாற்றம் செய்யப்பட்டது. 70 ஆண்டு கால பேரினவாத அரசியலின் விளைவை தற்போது பொருளாதாரச் சீரழிவாக நாடு அனுபவிக்கின்றது. இன்று ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பேரழிவின் தாக்கங்கள் அனைத்து இன மக்களையும் வேறுபாடு இன்றி பாதித்துள்ளது.

ஊழலுக்கும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கும் பொறுப்புக் கூற அழைப்பு விடுக்கும் போராட்டக்காரர்களால், இன்றுவரை தமிழ் மக்கள் மீதான இனவழிப்புக்கு மட்டுமல்ல; இறுதி நேரத்தில் முள்ளிவாய்க்காலில் செய்யப்பட்ட இனவழிப்புக்காகத் தன்னும் பொறுப்புக் கூற வேண்டும் என இன்றுவரை கூற முடியவில்லை. இந் நாளில் எங்களின் ஆத்மார்த்த கோரிக்கைகளை மீண்டும் ஒரு தடைவ வலியுறுத்த விரும்புகின்றோம்.

1. நினைவுகூர்தலுக்கான உரிமையும் ஓர் அடிப்படை உரிமை. அது ஈழத்தமிழர்களின் பண்பாட்டு உரிமையும் கூட. ஈழத்தமிழர்களின் அந்த உரிமையை அரசு ஒரு போதும் தடுக்க முடியாது.

2. தமிழினப் படுகொலைக்கு சர்வதேச விசாரணையை மீள வலியுறுத்துகின்ற அதே நேரத்தில் வடக்கு-கிழக்கில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சிங்கள-பௌத்த மயமாக்கப்படும் தமிழர் தாயகம் உட்பட்ட கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு செயற்பாடுகள் அனைத்தையும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

3. ஈழத்தமிழர்களின் பூர்வீக தாயகமாக வடக்கு- கிழக்கை அங்கிகரித்தல் வேண்டும்.

4. பௌத்த-சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறைக்கான ஒரு பொறிமுறையே ஒற்றையாட்சி முறைமை என்பதை ஏற்றுக் கொண்டு, ஒற்றையாட்சியை அகற்றித் தமிழனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரித்தல் வேண்டும்.

5. தமிழர்கள் ஒரு தேசமாக தங்களை அடையாளப்படுத்தத் தேவையான அனைத்து இயல்புகளையும் பண்புகளையும் கொண்டவர்கள் என்பதையும் அதன் வழி அவர்களுக்கு சுயநிர்ணய உரிமையும் ஒரு போதும் பாரதீனப்படுத்த இயலாத இறைமையும் உள்ளது என்பதும் ஏற்கப்பட வேண்டும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## எரிவாயுக்கு 20...

எனினும் நேற்று முன்தினம் அக்கப்பல்கள் இலங்கை கடற்பரப்புக்குள் வந்திருந்தாலும் மோசமான காலநிலை காரணமாக அக்கப்பலில் இருந்து எரிவாயுவை பெற்றுக்கொள்ள முடியாத நிலையே காணப்படுகிறது.

நாளொன்றுக்கு 80 ஆயிரம் சிலிண்டர்களே சந்தைக்கு விநியோகிக்க முடியும். எனினும் லிற்றோ நிறுவனத்திடம் தற்போது 40 இலட்ச வெற்று சிலிண்டர்கள் காணப்படுகின்றன. எனவே இவற்றில் எரிவாயுவை நிரப்பி விநியோகிப்பதற்கும், சமையலில் எரிவாயு செயற்பாடுகள் வழமைக்கு திரும்புவதற்கும் சுமார் 20 நாட்கள் வரையில் செல்லும் எனவும் தெரிவித்தார்.

## கடனை செலுத்த...

இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக நாங்கள் கடனை மீளச் செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். 30 நாட்களுக்கான சலுகைக் காலம் வழங்கப்பட்டிருந்தது. அதுவும் முடிவடைந்துள்ளது. குறிப்பாக ஒரு கொடுப்பனவை மீளச் செலுத்தாவிட்டால் மற்றைய அனைத்தும் நெருக்கடிக்குள் செல்லும். இதன்படி இன்றைய நிலைமையில் அடுத்த மாதமளவில் 5.5 பில்லியன் டொலர்களை செலுத்த வேண்டியுள்ளது. இந்த நேரத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் நாங்கள் சட்டத்தரணிகளையோ, நிதி ஆலோசகர்களையோ நியமிக்கவில்லை. அலிசப்ரி, அப்போது இதனை செய்யலாம் என்று நினைத்தே குறித்த 30 நாட்கள் சலுகைக் காலத்தை கோரியிருக்கலாம். இப்போது பிரதமரின் வேலைத்திட்டம் என்ன என்று கேட்கின்றோம் என்றார்.

## கோட்டாபய ஆட்சியில்...

கூட்டமைப்பை சேர்ந்த ஜோசப் பரராஜசிங்கம்,ரவிராஜ், சிவநேசன்,சந்திரநேரு ஆகிய எம்.பிக்களே இதே அரசாங்கத்தின் காலத்தில் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களுக்கான நீதி கூட இன்றுவரை கிடைக்கவில்லை. அதுமட்டுமல்ல இந்த அரசாங்கத்தில்தான் முள்ளிவாய்க்காலில் எமது மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். அவ்வாறு படுகொலை செய்யப்பட்ட இன்றைய நாளில் அவ்வாறு கொல்லப்பட்ட எமது உறவுகளுக்கு அனுதாபத்தையும் அஞ்சலியையும் இங்கு தெரிவிக்கின்றேன்.

தமிழர்களின் இரத்தக்கறை படிந்த கோட்டாபய ராஜபக்ஷவே இன்று ஜனாதிபதியாக இருக்கின்றார். அவர் ஆட்சியில் இருக்கும்வரை தமிழ் மக்களுக்கு எந்த விமோசனமும் கிடைக்காது என்றார்.

## இலங்கையை...

இந்த கொடுமைகளைச் செய்த குற்றவாளிகள் 13 ஆண்டுகளாகியும் இதுவரை நீதியின் முன் நிறுத்தப்படவில்லை எனவும் இன்று இத்தகைய பாரதூரமான மனித உரிமை மீறல்களிற்கு உள்ளானவர்கள் மற்றும் அதில் உயிர்பிழைத்தவர்களின் குடும்பங்களிற்கு நீதி கிடைக்க தொழிற்கட்சி மீண்டும் உறுதியளிப்பதுடன் பிரித்தானிய அரசாங்கம் தமிழ்ச் சமூகத்துடன் நிற்கவேண்டுமெனவும், மிக மோசமான குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்ப ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரைகளிற்கு செவிசாய்க்க வேண்டுமென வலியுறுத்துகின்றோம் எனவும் பிரித்தானிய தொழிற்கட்சித் தலைவரும் மகாராணியின் சட்டத்தரணியும் முன்னாள் அரச தரப்பு சட்டத்தரணியுமான, கெய்ர் ஸ்டார்மர் பிரித்தானியா அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளார்.

இன்று முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் இலங்கைப் போரின் இறுதிக்கட்டத்தின் போது கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ மக்களை நினைவு கூருவதாகவும் தாம் இந்த நாளை நிதானமாக சிந்திக்கும் போது தங்கள் எண்ணங்கள் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் குடும்பத்தினர் மற்றும் அன்புக்குரியவர்களை நோக்கியே உள்ளதெனவும் தொழிற்கட்சி தமிழ் சமூகத்துடன் இணைந்து நின்று தொடர்ந்து செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

## யாழ்...

ஒரு மோட்டார் சைக்கிளில் மூவரும், மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் இருவரும் பயணித்த நிலையில், இரு மோட்டார் சைக்கிள்களும் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டுள்ளன.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் செலுத்துநர்கள் இருவர் மற்றும் அதில் பயணித்த மற்றுமொருவர் ஆகிய மூவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் படுகாயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுன்னாகம், கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்த 17, 23 மற்றும் 25 வயதுகளையுடைய இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிள் இரண்டும் தீப்பற்றி எரிந்த நிலையில் அயலவர்கள் கூடி தீயை அணைத்து , பாடுகாயமடைந்த மூவரை, அம்பியூலன்ஸ் மூலம் வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

விபத்து தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்டு, வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

மோட்டார் சைக்கிள் செலுத்துநர்கள் கவனயீனமாக மோட்டார் சைக்கிளை செலுத்தியதன் காரணமாக, இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## மோதலின்...

நாட்டின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் சுதந்திரத்திற்காக தமது பொன்னான உயிர்களை தியாகம் செய்த இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் தேசபக்தியுள்ள போர்வீரர்களின் நேசத்துக்குரிய நினைவுகளை மரியாதையுடன் நினைவுகூரும் தினமே தேசிய போர்வீரர் தினமாகும் (வெற்றி தினம்).

2009 மே மாதத்துக்கு முன்னர் இராணுவத்தின் வீரமிக்க போர்வீரர்கள் 23,962 பேர், கடற்படையினர் 1,160 பேர், விமானப்படையினர் 443 பேர், 2,598 பொலிஸார், 456 சிவில் பாதுகாப்பு திணைக்களப் பணியாளர்கள் என மொத்தம் 28,619 பேர் உயிர் தியாகம் செய்துள்ளனர். அவர்களின் வீரம், விலைமதிப்பற்ற தியாகம், தன்னலமற்ற அர்ப்பணிப்புக்காக அன்றைய தினம் ஒவ்வோர் ஆண்டும் மரியாதையுடன் நினைவுகூரப்படுகிறது.

## பேக்கரி,...

பேக்கரி உற்பத்திகளுக்கான அனைத்து மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக சிறு மற்றும் நடுத்தர அளவிலான பேக்கரிகள் பெருமளவு உற்பத்தியை முற்றாக நிறுத்தியுள்ளன என்று சுட்டிக்காட்டினார்.4,000 ரூபாய்க்கு குறைவாக இருந்த மா மூடை 12,000 ரூபாயாக அதிகரித்துள்ளதாகவும் 37.5 கிலோ எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 20,000 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். இலங்கையின் கோதுமை மாவுக்கான தேவையில் 30 சதவீதத்தை வழங்கும் நிறுவனம் ஒரு கிலோ கிராம் மாவின் விலையை 35 ரூபாவால் அதிகரித்துள்ளது என்றும் பல நிறுவனங்களுக்கு மாவின் விலையை கட்டுப்படுத்த அரசாங்கம் உடனடியாக தலையிட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## கடந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது அவசியம்


போரில் உயிரிழந்தவர்களையும் உண்மை, நீதி மற்றும் இழப்பீட்டைக்கோரும் குடும்பங்களையும் நினைவுகூருகின்றோம். நல்லிணக்கத்தையும், பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளையும் உறுதிசெய்ய கடந்தகால பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது மிக அவசியம் என ஐ.நா. வின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் தெரிவித்துள்ளார்.

அதேபோல் பல தசாப்தங்களாக நடந்த மோதலில் இலங்கையின் பல பொதுமக்கள் கொல்லப்பட்டு 13 வருடங்கள் ஆகின்றன. பாதிக்கப்பட்டவர்களுக்கு செவிசாய்ப்பதும், அவர்களின் வலிகளை புரிந்துகொள்வதும் அவர்களுக்கு என்ன நடந்தது, எதற்காக நடந்தது என்பதை புரிந்துகொள்வது முக்கியமானதாகும் என இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினொன்

## தோல்வியடைந்த ஜனாதிபதியை ரணில் பாதுகாக்கிறார்

■ பா.நிரோஸ்

தமிழ் மக்களின் உரிமைகளை எவ்வாறு அரசாங்கம் மறுத்ததோ அதேபோல் தனது சொந்தமக்களான சிங்கள மக்களின் உரிமைகளை அரசாங்கம் மறுத்தமையே நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் ஏற்படக் காரணமென தெரிவிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தோல்வியடைந்த ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பதாகவும் தெரிவித்தார்.



ஆட்சியில் உள்ள அரசாங்கம் எங்களுக்கானதில்லை என நாட்டு மக்கள் எப்போது சிந்திக்க ஆரம்பிக்கி றார்களோ, அவர்கள் அரசாங்கத்துக்கு எதிராகத்தான் திரும்புவார்கள் எனவும் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் உரிமைகளை எவ்வாறு இந்த அரசாங்கம் மறுத்தோ அவ்வாறே சிங்கள மக்களின் உரிமைகளையும் இந்த அரசாங்கம் மறுத்து வருகிறது. இதனாலேயே நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறின. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பதவி விலகவில்லை என்பதாலேயே நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டது எனவும் தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபரே

## தாக்குதலை தடுக்க வேண்டாமென உத்தரவிட்டார்

### ரமேஸ் பத்திரன சபைக்கு அறிவித்தார்

■ பா.நிரோஸ்

காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் தாக்கப்படும்போது அதனை பொலிஸார் தடுக்க வேண்டாமென பொலிஸ்மா அதிபரும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் பொலிஸாருக்கு உத்தரவிட்டனர் என்பதே உண்மை என ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ரமேஸ் பத்திரன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் தாக்கப்படுவதற்கு முன்னர் நான் மேல்மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு தொலைபேசி ஊடாக அழைப்பை எடுத்து வன்முறைச் சம்பவம் தொடர்பில் எச்சரித்து இதனை பொலிஸார் தடுத்து நிறுத்த வேண்டும் என்றேன். அப்போது இதனை நாம் தடுத்து நிறுத்துவோம் என்றே தேசபந்து தென்னகோன் என்னிடம் கூறினார்.

எனினும் அலரிமாளிகையில் இருந்து வந்தவர்கள் காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டோரைத் தாக்கினார்கள். இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசுமாரசிங்க எனக்கு தொலைபேசியில் அழைப்பை எடுத்து இது தொடர்பில் கூறியதோடு, உடனடியாக ஜனாதிபதிக்கு இதனை அறிவித்து தடுத்துநிறுத்த வேண்டும் என கூறினார் என்றார்.

## பிரதமர்...

பாராளுமன்றத்தின் நேற்றைய (18) அமர்வில் கலந்துகொண்டு மரிக்கார் எம்.பியின் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே ரணில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதி சபாநாயகராக பெண் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமிக்கப்பட வேண்டுமென நான் கூறியதை ஏற்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ரோஹினி கவிரத்னவின் பெயரை முன்மொழிந்திருந்தார். இரண்டு வருடங்களுக்கு பின்னர் எனது யோசனையை சஜித் ஏற்றுக்கொண்டுள்ளார் இதற்காக நான் அவருக்கு நன்றிகளை தெரிவிக்கிறேன். இதேபோல் ஆளுங்கட்சியினரும் எனது யோசனைகளை கேட்பார்கள். அதற்கு ஒரு வாரம் தேவை. அந்த ஒருவாரத்தை தாருங்கள் ஆளுங்கட்சியினரையும் சரி செய்கிறேன் எனவும் ரணில் தெரிவித்தார்.

நாட்டை நான் விற்றுவிட்டதாக 2018ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் மஹிந்த கூறினார். 2020ஆம் ஆண்டு தற்போதைய எதிர்க்கட்சியினரும் அதனையே கூறினார்கள். எனவே நான் இரு பக்கங்களிலும் எவரையும் பாதுகாக்கப்போவதில்லை சட்டரீதியாகவே நான் செயற்படுவேன் என்றார்.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

உலக வங்கியிடமிருந்து

# 160 மில்லியன் டொலர் கிடைத்தது

உலக வங்கியிடமிருந்து 160 மில்லியன் டொலர் நேற்றைய தினம் (நேற்றுமுன்தினம்) கிடைக்கப்பெற்றது. இந்தத் தொகையை எரிபொருளுக்கு செலவிட முடியாது. எனினும் முடியுமாக இருந்தால், இதனை எரிபொருளுக்காக செலவிடுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென நாம் கோரிக்கை விடுத்துள்ளோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார். ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் இதுபோன்ற தொகை கிடைக்கும் எனவும் கூறினார்.



மிகவும் சிரமமான காலமொன்றுக்கு நாம் அனைவரும் முகங்கொடுக்கப் போகிறோம். எவ்வாறு அந்தக் காலத்தை கடந்து, முன்னோக்கி செல்லப்போகிறோம் என்பதை, கட்சி பேதங்களுக்கு அப்பால் அனைவரும் ஒன்றிணைந்து சிந்திக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எரிபொருள் பிரச்சினைகளுக்கு அரச ஊழியர்கள் முகங்கொடுப்பார்களாக இருந்தால், அதற்கான நிதி உதவியை அரசாங்கத்தால் அவர்களுக்கு வழங்க முடியும். நாட்டுக்கு தேவையான அளவு உரம் கையிருப்பில் இருப்பதாக நான் நம்பவில்லை. பெரும்போகத்துக்கான உரத்தை நாம் பெற்றுக்கொள்வோம். ஆனால் உக்ரைன் - ரஷ்ய யுத்தம் காரணமாக, உரத்தின் விலை அதிகரித்துள்ளது.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையில் கடனை மீளச் செலுத்துவதற்காக ஒரு மில்லியன் டொலரைக்கூட தேடிக்கொள்ள முடியாத நிலைமையே காணப்படுகின்றது. செலுத்தப்பட வேண்டிய கடன் தொடர்பாக, அடுத்த வாரத்தில் அறிக்கை ஒன்றை நாம் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். வெளிநாட்டுக் கடன்களை செலுத்துவதற்கான பணம் நாட்டில் இல்லை என்றார்.

## பாதிக்கப்பட்ட எம்.பிக்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளன

**அரசாங்கம் அறிவிப்பு**



வன்முறைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டு, வீடுகளை இழந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்காலிகமாக வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபைக்கு அறிவித்தார்.

1988, 1989ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற கலவரங்களில் பாதிக்கப்பட்ட அப்போதைய அதிகாரிகளுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தற்காலிகமாக வீடுகள் வழங்கப்பட்டன. பின்னர் அவர்கள் சொந்த வீடுகளுக்கு சென்றுவிட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தாக்கப்பட்ட சம்பவங்களுக்கு பின்னணியில், அரசியல் கட்சிகள் இருப்பதாகவும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினரும் இப்பின்னணியில் இருப்பதாகவும் தெரிவித்த ரணில், விசாரணைகளில் இந்த விடயங்கள் நிரூபிக்கப்பட்டால், வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கட்சிகளில் இருந்தும் நீக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## வீட்டைக் கொளுத்திய இளைஞர்களுக்கு நன்றி



பாராளுமன்ற உறுப்பினர்கள் கொலை செய்யப்படுவதையும் அவர்களது வீடுகள் எரிக்கப்படுவதையும் அரசாங்கமும், இராணுவமும் பொலிஸாரும் தடுக்க தவறியுள்ளதாக தெரிவிக்கும் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன, இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில், ஐரோப்பிய பாராளுமன்ற ஒன்றியமும் சர்வதேச பாராளுமன்றமும் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் சபையில் கோரிக்கை விடுத்தார்.

மே 9 வன்முறைச் சம்பவத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சித்திரவதை செய்து படுகொலை செய்யப்பட்டு, நிர்வாணமாக வீதியில் வீசி எறியப்பட்டிருந்தார். இதுபோன்ற சம்பவங்கள் உலகில் வேறெங்கும் நடந்திருக்காது. இலங்கையில் கூட, இதுவே முதற்றடவை எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்றத்தில் சுதந்திரமாக உரையாற்றுவதற்கும், சுதந்திரமாக அவர்களது வீடுகளில் வாழ்வதற்குமான உரிமையை அரசியலமைப்பில் உறுதி செய்ய வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தாக்கப்படும் எனத் தெரிந்தும் பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். பொலிஸ்மா அதிபர் இச்சம்பவம் நடைபெறுவதை முன்கூட்டியே அறிந்திருந்தார்.

எனது வீட்டை கொளுத்தியவர்கள், எனது வீட்டில் உள்ள நூலகத்தைக் கொளுத்தவில்லை. அதற்காக நான் எனது வீட்டை கொளுத்தியவர்களுக்கு நன்றிகளை தெரிவிக்கிறேன். என்னைக் கொளுத்தினாலும் பரவாயில்லை. ஆனால் எனது அரசியலால், எனது பிள்ளைகளும் நட்டஈட்டை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

ஜெனீவாவுக்கு செல்லும் போது

## எம்.பிக்கள் தேசாபிமானிகள்; மக்கள் தேசத்துரோகிகளா?

மே 9 வன்முறைச் சம்பவங்களின்போது, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் ஜெனீவா செல்ல வேண்டுமென ஆளுங்கட்சியினர் கூறுகின்றார்கள். ஆனால், சாதாரண மக்கள், முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்காக ஜெனீவா சென்றால், அவர்களை தேசத்துரோகி என்கிறார்கள் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் தெரிவித்தார்.

அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதாகக் கூறி, அச்சிடப்படும் பணத்தைக் கொண்டு, வன்முறைச் சம்பவங்களில பாதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கம் நட்டஈட்டை வழங்கிவிடும் என்கிற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. வன்முறை சம்பவங்களால் பாதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நட்டஈடு வழங்கப்படுமென வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். அப்படி என்றால், காஸ் சிலிண்டர் வெடித்து வீடுகளை இழந்தவர்களுக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்கியதா? உர தடையால் பாதிக்கப்பட்டுள்ள வாழ்வாதாரம் இழந்துள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா? எனவும் கேள்வி எழுப்பினார்.

அரசாங்கம் நட்டஈட்டை வழங்க வேண்டுமென்றால், இந்த அரசாங்கத்தின் இரண்டு வருட ஆட்சியில் பாதிக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் நட்டஈட்டை வழங்க வேண்டும். லசந்த விக்ரமதுங்க உள்ளிட்ட ஊடகவியலாளர்கள், தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலைக்கு நீதி வேண்டி ஜெனீவா சென்றால் தேசத்துரோகம் என்கிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதிப்பு ஏற்படும்போது, ஜெனீவா சென்றால் தேசபிமானம் என்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

## சம்பளத்தில் நட்டஈடா?

**சபையில் சஜித் கேள்வி**



அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதாகக் கூறி, அச்சிடப்படும் பணத்தைக் கொண்டு, வன்முறைச் சம்பவங்களில பாதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கம் நட்டஈட்டை வழங்கிவிடும் என்கிற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நட்டஈட்டை வழங்கப்படுமென வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். என்றால் காஸ் சிலிண்டர் வெடித்து வீடுகளை இழந்தவர்களுக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்கியதா? உரதடையால் பாதிக்கப்பட்டுள்ள வாழ்வாதாரம் இழந்துள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா? எனவும் எனவும் கேள்வி எழுப்பினார்.

அரசாங்கம் நட்டஈட்டை வழங்க வேண்டுமென்றால் இந்த அரசாங்கத்தின் இரு வருட ஆட்சியில் பாதிக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் நட்டஈட்டை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு

## மட்டக்களப்பில் பொலிஸாரால் இடையூறு



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறுகின்ற நிலையில், மட்டக்களப்பில் அதற்கு பொலிஸாரால் இடையூறு விளைவிக்கப்பட்டதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான இரா. சாணக்கியன் பிரதமரின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி, மட்டக்களப்பில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்ற நிலையில், அதனை தடுக்கும் பணிகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலையீடு செய்யவேண்டும். முள்ளிவாய்க்கால் நிகழ்வுகள் காலிமுகத்திடலிலும் இடம்பெறுகின்றது.

ஏற்கெனவே அமைதியான நினைவேந்தல்களுக்கு இடமுள்ளதாக பிரதமர் ரணில் தெரிவித்துள்ள நிலையில், மட்டக்களப்பில் பொலிஸார் நினைவேந்தலை தடுக்க முற்படுவதுடன் பதாகைகளையும் அகற்றுகின்றனர் என்றார்.

## முழு அமைச்சரவை எப்போது நியமிக்கப்படும்?



முழுமையான அமைச்சரவை எப்போதும் நியமிக்கப்படுமென்பதை அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சபையில் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (18) அமர்வின்போது, அமைச்சரவை முழுமையாக நியமிக்கப்படவில்லை என்பதால் வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு பதிலளிப்பதில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனவே வாய்மூல விடைக்கான வினாக்களை வேறொரு தினத்துக்கு மாற்றுவதாக சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய அநுரகுமார திஸாநாயக்க, வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு பதிலளிப்பது, தொடர்ந்து இரு வாரங்களாக இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. அமைச்சரவை முழுமையாக நியமிக்கப்படவில்லை என்பதால், பாராளுமன்ற செயற்பாடுகளுக்கு அது பாதிப்பை ஏற்படுத்தாது. தற்போது நாட்டில் நான்கு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சில கேள்விகளுக்காவது இவர்களால் பதிலளிக்க முடியும். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் நியமிக்கப்படும் செயற்பாடுகள் எப்போது முடிவடையும் என்கிற உரிய திகதியை அரசாங்கம் சபைக்கு அறிவிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## மஹிந்த, நாமல் சபைக்கு வந்தனர்

அரசுக்கு எதிராக கடந்த 9 ஆம் திகதி நாட்டில் வன்முறைகள் வெடித்ததையடுத்து பிரதமர் பதவியிலிருந்து விலகிய நிலையில் திருகோணமலை கடற்படைத்தளத்திற்கு அழைத்து செல்லப்பட்டு, பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டிருந்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் நேற்று (18) பாராளுமன்ற அமர்வில் பங்கேற்றனர்.

பாராளுமன்றம் நேற்று புதன்கிழமை காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இந்நிலையில் முதலில் முன்னாள் அமைச்சரும் எம்.பியுமான நாமல் ராஜபக்ஷ சபையில் வந்து அமர்ந்திருந்தார். காலை 10.40 மணியளவில் முன்னாள் பிரதமரும் எம்.பியுமான மஹிந்த ராஜபக்ஷ சபைக்குள் வந்தார்.

மஹிந்த ராஜபக்ஷ சபைக்குள் வந்தபோது, வழக்கம் போலவே அவருக்கு பின்னால் பல எம்.பிக்கள் வந்தனர். சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன, அரச தரப்பு பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்டவர்கள் எழுந்து நின்று, மஹிந்த ராஜபக்ஷவுக்கு மரியாதை செலுத்தினர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷவை பார்த்து சிரித்தவாறு அமர்ந்திருந்தார்.

உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் தமிழ்Mirror
பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள் பதிவு செய்வதற்கு
Dialog Type TM and send to 87798
Daily Rs.1/=+TAX
HUTCH Type TM and send to 2233
Monthly Rs.30/=+ TAX
SLTMOBITEL Type REG TM and send to 77012
Daily Rs.1/=+TAX



கிழக்கு மாகாண ஆசிரியர்


# இடமாற்றத்தில் பாரபட்சம்

■ நூருல் ஹுதா உமர்

கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றத்தில் இம்முறை பாரபட்சம் காட்டப்பட்டு உள்ளதாக பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் 06/04/2022ஆம் திகதியுடைய கடிதத்தின் பிரகாரம், வெளி வலயங்களுக்கான மேலதிக பதிலீட்டு ஆசிரியர்கள் இடமாற்றம், எந்தவித நிபந்தனை காலமும் இடப்படாமல் அனுப்பப்பட்டுள்ளமை கவலை அளிப்பதாக ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு முன்னைய காலங்களில் வழங்கப்பட்ட வெளி வலய ஆசிரியர் இடமாற்றங்கள்




யாவும் இரண்டு அல்லது மூன்று வருடங்கள் என நிபந்தனை காலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளி வலயங்களுக்கு செல்லும் ஆசிரியர்கள் யாவும் ஆகக் குறைந்தது 15 வருடங்கள் வேறு வேறு பாடசாலைகளில் சேவையாற்றியவர்கள் என்பதுடன், இவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்லும் வலயங்களில் இருந்து மீண்டும் எப்போது தமது சொந்த வலயங்களுக்கு இடம் மாற்றப்படுவார்கள் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை என ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் தற்போதைய பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு கல்வி அமைச்சே ஆசிரியர் நியமனங்களை அவர்களது சொந்த இடங்களில் வழங்குமாறு கூறும்போது, மாகாண கல்வித் திணைக்களங்கள் பொருத்தமில்லாத வகையில் ஆசிரியர்களை தெரிவுசெய்து, வெளிவலயங்களுக்கு இடமாற்றம் செய்வது வேதனை அளிப்பதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் மிகக் கூடிய கவனம் எடுத்து, வழங்கப்பட்ட இடமாற்றங்களுக்கு நிபந்தனை காலத்தை வழங்கி, ஆசிரியர் சேவைக்கு கல்வி அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

இறுதிப் போர்:

# பொறுப்புக் கூறலை நிபந்தனையாக்கவும்

## சர்வதேசத்திடம் முன்வைப்பு

■ வி.நிதர்ஷன்

நாட்டில் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு நிபந்தனைகளுள், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட மலேச்சத்தனமான மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறலும் அமையவேண்டுமெனக் கோரிக்கை விடுப்பதாக, வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் நேற்று (18) முள்ளிவாய்க்கால் நினைவுச் சுடரை ஏற்றி வைத்து உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "எமது மக்கள் மீது அரச பயங்கரவாதம் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டே வந்துள்ளது.



"பெரும்பான்மையின மக்கள் போன்று உரிமைகளுடன், நாமும் ஒரு தேசிய இனம் என்ற வகையில் நாட்டில் வாழ வேண்டும் என்றே தமிழ் இனம் அபிலாஷை கொண்டுள்ளது.

"அரசியல் உரிமைகளை கேட்டு, அஹிம்சை வழியில் போராடிய போது, எமக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்ட அரச பயங்கரவாதமே ஆயுதப் போருக்கு வழிவகுத்தது. அரச படைகள் ஊடாக எமது சிறுவர்கள், வயோதிபர்கள், பெண்கள் என்ற பாகுபாடின்றி மிலேச்சத்தனமாக படுகொலை செய்யப்பட்டுள்ளோம்.

"மனித உரிமைகளுக்காக சர்வதேசம் பாடுபடுகின்ற ஒரு சூழ்நிலையில், அத்தனை உரிமைகளும் அரசினாலேயே இலாவகமாக மீறப்பட்டுள்ளன. அரச படைகளிடம் சரணடைந்த மற்றும் அரச படைகளால் கடத்தப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களைத் தேடி தாய்மார் இன்றும் போராடுகின்றனர். எதற்குமே நீதி கிட்டவில்லை.

"இந்நிலையில், இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில், இலங்கைக்கு வழங்க இணக்கம் காணப்படுகின்ற உதவிகள், தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட பாரிய மனித உரிமை மீறல்கள் பற்றிய பொறுப்புச் சொல்வதை உறுதிப்படுத்த வேண்டும்" என்றார்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு

# வற்றாப்பளை அம்மனும் சாட்சி

## ரவிகரன் எடுத்துரைப்பு

■ விஜயரத்தினம் சரவணன்

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்கு நந்திக்கடல் மாத்திரமல்ல; வற்றாப்பளை அம்மனும்கூட சாட்சியாக உள்ளார் என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் ஆத்மசாந்தி வேண்டி, நந்திக்கடலில் அஞ்சலி செலுத்தினார்.

அதைத் தொடர்ந்து, வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலில் நேற்று (18) வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில், "தமிழினத்தின் மீதான மிகப்பெரியதொரு படுகொலை, முள்ளிவாய்கால் படுகொலையாகும்.



"முள்ளிவாய்கால் இனப் படுகொலைக்குச் சாட்சியாக நந்திக்கடல் மாத்திரமல்ல; வற்றாப்பளை அம்மனும் சாட்சியாக இருக்கின்றார்.

"முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட அனைத்து உறவுகளுக்காகவும் எனது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்றார்.







முள்ளிவாய்கால் நினைவேந்தல்:

# மட்டக்களப்பில் த.தே.கூ நிகழ்வுகள்

■ கனகராசா சரவணன், எம்.எஸ்.எம்.நூர்தீன்

கிழக்கில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, மட்டக்களப்பில் நேற்று (18) நடைபெற்றது.

உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்தி வேண்டி கல்லடி ஸ்ரீ முருகன் கோவிலில் விசேட வழிபாடும், ஈகைச்சுடரேற்றி, மௌன அஞ்சலியும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து முள்ளிவாய்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இந்த நினைவேந்தலில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கான செல்வராசா, ஞா.சிறிநேசன், எஸ். யோகேஸ்வரன், மட்டு. மாநகர சபை மேயர் ரி.சரவணபவான், பிரதி மேயர் சத்தியசீலன், கிழக்கு மாகாண சபை முன்னாள் பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.









கிளிநொச்சியில்

# உணர்வுபூர்வமாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

■ மு.தமிழ்ச்செல்வன்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, கிளிநொச்சியில் சமத்துவக் கட்சி அலுவலகத்தில், முன்னாள் போராளி கண்ணன் தலைமையில், உணர்வுபூர்வமாக நேற்று (18) அனுஷ்டிக்கப்பட்டது.

கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் லோறன்ஸ், பொதுச் சுடரை ஏற்றி வைக்க ஏனையவர்களும் சுடர்களை ஏற்றி, நினைவு படத்துக்கு மலர் அஞ்சலி செலுத்தி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கடைப்பிடித்தனர்.

# பெண்களுக்கென பிரத்தியேக நூலகம்



■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

ஏறாவூர் நகர சபையின் ஏற்பாட்டில், பெண்களுக்கென பிரத்தியேக நூலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக நகர சபைத் தவிசாளர் எம்.எஸ். நழிம் தெரிவித்தார்.

பெண்களுக்கென தனியான பொதுச் சந்தை, இலங்கையிலேயே ஏறாவூரில்தான் உள்ளது. அதேபோல், பெண்களுக்கென தனியாக உடற்பயிற்சி ஏற்பாடுகளும் ஏறாவூர் வாவிக் கரையோரத்தில் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

'பாத்திமா மகளிர் நூலகம்' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வாசிகசாலைத் திறப்பு விழா, ஏறாவூர் வாவிக் கரையோரத்தில் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்கக்



கட்டடத்தில் நகர சபைத் தவிசாளர் தலைமையில் நேற்று முன்தினம் (17) மாலை நடைபெற்றது.

இந்நிகழ்வில், ஏறாவூரின் பெண் ஆளுமைகளான பிரதேச செயலாளர் நிஹாறா, ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி ஷாபிறா, பிரதேச செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் சிஹானா, தென்னை பயிர்ச் செய்கை ஆய்வு கூடப் பொறுப்பாளர் ஜாஹிறா, நகர சபை உறுப்பினர் சுலைஹா உட்பட ஏறாவூர் நகர சபைச் செயலாளர் எம்.எச்.எம். ஹமீம், நகர சபை பிரதித் தவிசாளர் ஏ.எஸ்.எம். றியாழ் உட்பட இன்னும் பல அதிதிகள் கலந்துகொண்டனர்.





# பெண்களுக்கான கழிவறை சேதம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன், ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு, காத்தான்குடி கடற்கரையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பெண்களுக்கான கழிவறை தொகுதி, இனந்தெரியாதோரால் நேற்று (18) அதிகாலை சேதப்படுத்தப்பட்டுள்ளது.

காத்தான்குடி நகர சபையால் காத்தான்குடி கடற்கரை பகுதியில் பெண்களுக்கான இக்கழிவறை தொகுதி நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

காத்தான்குடி கடற்கரைக்கு வரும் பெண்களுக்கு கழிவறை வசதி இல்லாததால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில், காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பரின் முயற்சியால் கழிவறை தொகுதி நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

# 'அளவெட்டி கனி' மீது வாள் வெட்டு

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், தொட்டிலடி பகுதியில் வைத்து அளவெட்டியைச் சேர்ந்த 'அளவெட்டி கனி' என்று அழைக்கப்படும் 37 வயதுடைய நபர் மீது, வாள் வெட்டு இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் (17) இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவத்தில், தலையில் படுகாயமடைந்த கனி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நபர் வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, வட்டிக்கு கொடுத்த பணத்தை வசூலிப்பதற்காக, சண்டிலிப்பாய் பகுதிக்கு 'அளவெட்டி கனி' வந்த போது, மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த 06 பேர் கொண்ட குழுவே வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பி சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்சிகளைப் பிரிப்பது

# பசிலுக்கு கைவந்த கலை

■ டி.ஷங்கீதன்



பிரதி சபாநாயகர் தெரிவில், ஒற்றுமையாகச் செயற்பட கட்சிகள் தீர்மானித்திருந்த போதிலும், பசில் ராஜபக்ஷவே அதனை இல்லாமல் செய்தார் எனக் குற்றஞ்சாட்டிய நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன், "இலங்கை அரசியலில் இருந்து, பசில் ராஜபக்ஷவை அப்புறப்படுத்தாத வரை, மாற்றங்களைக் கொண்டு வர முடியாது" என்றார்.

பிரதி சபாநாயகர் தெரிவு தொடர்பாக, நேற்று (18) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், "பிரதி சபாநாயரைத் தெரிவு செய்யும் விடயத்தில், பிரதமரின் ஆலோசனைக்கு அமைய, ஐக்கிய மக்கள் சக்தி அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி, பெண் ஒருவரை பெயரிட்டிருந்தது. அதற்கு அனைவரும் சம்மதித்திருந்த நிலையிலேயே தெரிவு நடைபெற்றது.

"எனினும், பசில் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் பிரதி சபாநாயகராக ஆண் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

"இதனால் ஒற்றுமையாக செயற்பட தீர்மானித்திருந்த விடயத்தை இல்லாமல் செய்து, கட்சிகளைப் பிரித்தவர் இந்த பசில் ராஜபக்ஷவே! இவருக்கு இது கைவந்த கலை. கடந்த காலங்களில் இவர், சிறுபான்மை கட்சிகளை பிரித்துத் துண்டாடினார். இன்றும் அதே வேலையையே தொடர்ந்து செய்கின்றார்.

"எனவே, இவ்வாறானவர்களுடன் தொடர்ந்து எப்படி, பிரதமர் பயணிக்கப் போகின்றார்? அவர் எதிர்பார்க்கின்ற மாற்றத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவார்? தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது அல்லது அனைத்துக் கட்சிகளும் இணைந்து செயற்படுவது என்பதெல்லாம் வெறும் பேச்சில் மாத்திரமே இருக்க முடியும்; செயலில் காட்ட முடியாது" என்றார்.

மொட்டுக் கட்சி அலுவலக தாக்குதல்:

## சந்தேகநபர்களுக்கு பிணை

■ ரஞ்சித் ராஜபக்ஷ




நாவலப்பிட்டி நகர மத்தியில் அமைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயின் அலுவலகம் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் (17) கைதுசெய்யப்பட்ட 10 பேருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

நாவலப்பிட்டி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சந்கேதநபர்கள் 10 பேரும், நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, தலா ஓர் இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்குமாறும் இது தொடர்பான வழக்கை, அடுத்த மாதம் 27ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பதாகவும் நீதவான் நிலந்த விமலவீர உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் சார்பில் 8 சட்டத்தரணிகள் சுயாதீனமாக நீதிமன்றில் ஆஜராகி, காரணங்களை முன்வைத்தனர்.

இதனையடுத்து சந்தேகநபர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

நீர் வற்றியதும்

## பூக்களால் அழகுறும் மவுசாக்கலை



■ எஸ்.கணேசன்

மஸ்கெலியா, மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கத்தில் நீர் வற்றிப்போகும் காலப்பகுதியில், நீர்த்தேக்கத்தின் மத்தியில் வண்ணமயமான பூக்கள் பூத்துக் குலுங்குவது அழகிய காட்சியாக மாறியுள்ளது.

இந்த அழகான பூக்கள் ஊதா, வெள்ளை, நீலம் ஆகிய நிறங்களைக் கொண்டது. இந்த மலர்கள், கொத்துக் கொத்தாக பூத்துள்ளதோடு, பூக்களில் முட்களும் உள்ளன.

ஒவ்வொரு முறையும் நீர் வற்றும் போதும் இந்த அழகான பூக்களை பார்வையிடுவதற்கு அதிகளவானோர் வருகை தருகின்றனர்.

மாத்தளையில் அத்தியாவசிய சேவைக்காக

## நான்கு இடங்களில் எரிபொருளை நிரப்பலாம்

■ மஹேஸ் கீர்த்திரத்ன




அத்தியாவசிய சேவைக்கான எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக, மாத்தளை மாவட்டத்தில் 4 எரிபொருள் நிலையங்கள் பெயரிடப்பட்டுள்ளன என அத்தியாவசிய சேவை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

அதற்கமைய, மாத்தளை கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையம், தம்புள்ளை கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையம், யட்டவத்த கம்லத் எரிபொருள் நிரப்பு நிலையம், வில்கமுவ கசுன் எரிபொருள் நிரப்பு நிலையம் என்பவற்றில் அத்தியாவசிய சேவைக்கான எரிபொருளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



பதுளை வைத்தியசாலை

## பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை பொது வைத்தியசாலையின் பணியாளர்களால் நேற்று (18) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு, காலிமுகத்திடம் போராட்ட களத்தின் மீதும் போராட்டக்காரர்கள் மீதும் தாக்குதல் நடத்தியவர்களை கைதுசெய்யுமாறு வலியுறுத்தியே, இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பதுளை பொது வைத்தியசாலையின் சுகாதார ஒன்றியத் தொழிற் சங்கத்தினரால் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின்

## விசேட கூட்டம்




தொழிலாளர் தேசிய சங்கம், தொழிலாளர் தேசிய முன்னணி ஆகியவற்றின் தற்போதைய அரசியல் செயற்பாடுகள் குறித்து செயற்பாட்டாளர்களுக்கு விளக்கமளிக்கும் விசேட கூட்டம், எதிர்வரும் 22ஆம் திகதி ஹட்டனில் நடைபெறவுள்ளது,

தொழிலாளர் தேசிய சங்கம், தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தலைமையில், ஹட்டன் டி. கே. டப்ளியூ கலாசார மண்டபத்தில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் ஆகியோர், 'நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிலைப்பாடு' தொடர்பில் உரையாற்றவுள்ளனர்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தோட்டத் தலைவர்கள், மகளிர் அணி இணைப்பாளர்கள் உட்பட ஆதரவாளர்களும் கலந்துகொள்ள உள்ளதாக ஸ்ரீதரன் மேலும் தெரிவித்தார்.








## வரிசையில் சிலிண்டர்கள்

ஹட்டன் நகரில் உள்ள சமையல் எரிவாயு விற்பனை முகவர் நிலையம் முன்பாக, உரிமையாளர்கள் அற்ற நிலையில், நீண்ட வரிசைகளில் வெற்று சிலிண்டர்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

நேற்று (18) காஸ் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், குறித்த வெற்று சிலிண்டர்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததுடன், திருடர்களிடம் இருந்து தமது சிலிண்டர்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக சிலிண்டர்கள் ஒன்றுடன் ஒன்று கோர்வையாகக் கட்டப்பட்டிருந்தன.

(படங்கள்: சுதத்.எச்.எம். ஹேவா, ரஞ்சித் ராஜபக்ஷ)

திஸ்ஸ எம்.பியின்

## வீட்டை உடைத்த ஐவர் கைது

■ எம். செல்வராஜா

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டி ஆராச்சியின் வீடு தாக்கப்பட்டு, சேதம் விளைவிக்கப்பட்டமை தொடர்பில், பண்டாரவளை பொலிஸாரால் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் 9ஆம் திகதி, நாட்டில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து, பண்டாரவளை நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் பின்னர், அங்கு கூடிய கும்பல், மேற்படி பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டுக்குச் சென்று தாக்கி, பலத்த சேதத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட பண்டாரவளை பொலிஸார், நேற்று (18) ஐவரைக் கைது செய்து, விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

மேலும், சிலர் தேடப்பட்டு வருவதாகவும் கைது செய்யப்பட்டவர்களின் விசாரணைகள் நிறைவுற்ற பின்னர், பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் அவர்கள் ஆஜர் செய்யப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கொன்கிரீட் வேலி அகற்றப்பட்டது

■ சுஜித் சுரேன்

தலவாக்கலை பஸ் நிலையத்துக்கு முன்பாக இருந்த கொன்கிரீட் வேலி, நேற்று (18) தலவாக்கலை - லிந்துலை நகரசபையின் வேண்டுகோளுக்கு அமைய தகர்க்கப்பட்டது.

பஸ் நிலையத்திற்கு வரும் பஸ்கள் திருப்புவதற்கு இடவசதி இன்மையின் காரணமாக, சாரதிகள் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பிரதான வீதிக்கும் பஸ் நிலையத்துக்கும் இடையில் பாதுகாப்பு வேலியாக காணப்பட்ட கொன்கிரீட் வேலியை, நகர சபை அவ்விடத்திலிருந்து முழுமையாக அகற்றியுள்ளது. மாணவர்கள் உட்பட பாதசாரிகளின் பாதுகாப்பு தொடர்பில், மாற்று ஏற்பாடு எடுக்க வேண்டிய கட்டாய நிலைக்கு, நகர சபை தள்ளப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கலாநிதி பட்டம் பெற்று

## மலையகத்துக்கு பெருமை சேர்த்தனர்



■ பி.கேதீஸ்,

ஹட்டன் பிரதேச ஆசிரியர்கள் ஐவர், கல்வி மற்றும் முகாமைத்துவத் துறைகளில் கலாநிதி பட்டம் பெற்று, மலையகத்துக்கும் ஹட்டன் மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியின் ஆசிரியர் செல்லையா குமார், கொட்டகலை கேம்ரிஜ் கல்லூரியின் ஆசிரியர் வேலுப்பிள்ளை ரமேஸ்குமார், பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் முத்தையா கிருஸ்ணகுமார், நுவரெலியா கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகர் வேலுசாமி ஸ்ரீகுமார், கொத்மலை கல்வி வலயத்தின் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மாரிமுத்து சுப்ரமணியம் இங்கர்சால் ஆகியோர் அண்மையில் வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றினூடாக கலாநிதி பட்டத்தை பெற்றுள்ளனர்.

இவர்கள் கலாநிதி பட்டத்தை பெறுவதற்கும் இவர்களின் ஆய்வுக்கும் வழிகாட்டியாகவும் வளவாளர்களாகவும் செயற்பட்ட கலாநிதி பொன்னம்பலம் சிங்கரட்ணம், கலாநிதி சுப்ரமணியம் தனபாலன், கலாநிதி எஸ்.தெய்வேந்திரன், கலாநிதி சந்திரகுமார் ஆகியோர் இவர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு ஹட்டன் அஜந்தா வரவேற்பு மண்டபத்தில் திங்கட்கிழமை (16) நடைபெற்றது.

இதன்போது கலாநிதி பொன்னம்பலம் சிங்கரட்ணத்துக்கு கலாநிதி பட்டம் பெற்ற ஆசிரியர்களால் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மலையகம் தொடர்பான பிரச்சினைகளை ஆய்வுக்கு உட்படுத்தி, பயன் வாய்ந்த முன்மொழிவுகளை உரிய தரப்பினருக்கு வழங்குவதற்கு பூரண முடிவுகளும் இவர்களால் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சீரற்ற வானிலை:

## நுவரெலியாவில் 518 பேர் பாதிப்பு

■ பி.கேதீஸ்

நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற வானியால் நேற்று (18) வரை 151 குடும்பங்களைச் சேர்ந்த 518 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என, நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் தெரிவித்தார்.

வெள்ளம், மண்சரிவு, பலத்த காற்று என்பவற்றால் இந்தப் பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளன.

இதற்கமைய, நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 121 பேரும், அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் 108 குடும்பங்களைச் சேர்ந்த 350 பேரும், கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேரும், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 04 பேர் வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவிலும் 02 குடும்பங்களைச் சேர்ந்த 06 பேர் ஹங்குரான்கெத்த பிரதேச செயலாளர் பிரிவிலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இயற்கை அனர்த்தம் காரணமாக மாவட்டத்தில் 53 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலும் ஏனைய பிரதேசங்களிலும் வசிக்கும் மக்கள் அறிவுறுத்தல்களுக்கு அமைய அவதானத்துடன் செயற்படுமாறும் நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.



# யாசகர்கள் உதவிக்கரம் நீட்டும் அளவுக்கு நாடு வங்குரோத்தானது

சொல்லவேண்டிய நேரத்தில் சொல்லாமல் விடுவதும், சரியான நேரத்தில் முடிவை எடுக்காமையும், காலம் பிந்தி தவறான முடிவை எடுத்தலும், பிரச்சினைகளுக்கே வழிசமைக்கும். இது ஒவ்வொருடைய தனிப்பட்ட வாழ்விலும் ஏற்படவும் கூடும்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில், மேலே குறிப்பிட்ட மூன்றுமே இடம்பெற்றிருக்கின்றன. அதனால்தான், பொருளாதார ரீதியில் இப்படி வங்குரோத்து நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, தூரநோக்கத்துடன் தீர்க்கதரிசனமாகச் சிந்தித்தல், அரசியலுக்கு அத்தியாவசியமானது.

புள்ளிவிவரவியல் திணைக்களம், மத்திய வங்கியின் அறிவிப்பு உள்ளிட்டவற்றைக் கொண்டே, நாட்டின் பொருளாதார நிலைமை எந்த மட்டத்தில் இருக்கிறது என்பதை கணித்துக்கொள்ள முடியும். எனினும், வருமானம், செலவு, உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி உள்ளிட்டவற்றின் உண்மைத் தன்மையை மறைப்பதற்காக, புள்ளிவிவரங்கள் வேண்டுமென்றே மாற்றப்பட்டதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

மூன்று நாள்கள் விடுமுறைக்குப் பின்னர், எரிபொருள் வரிசை மீண்டும் நீண்டுள்ளது. துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பல்களில் இருந்து காஸ், எரிபொருட்கள் இறக்கப்படுகின்றன. வீதிகளை மறித்துப் போராட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

பொதுப் போக்குவரத்து குறைந்துவிட்டது. அவசிய தேவைகளுக்காக மட்டும் ஊழியர்களை அழைக்குமாறு அரசாங்கமும் வீட்டிலிருந்து வேலை செய்யும் முறைமையை மீளவும் நடைமுறைப்படுத்துமாறு தனியார்துறை நிறுவனங்கள் பலவும் அறிவித்துள்ளன. ஆக, நெருக்கடிக்கு முகங்கொடுப்பதில் பல துறைகளும் திணறிக்கொண்டிருக்கின்றன.

இந்நிலையில்தான், இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட நாடுகளும் நிதித்துறை சார் நிறுவனங்களும் உதவிக்கரம் நீட்டியுள்ளன. தமிழ்நாட்டிலிருந்து யாசகர்களும் இலங்கைக்கு நிதியளித்து தங்களுடைய மனிதாபிமானத்தைக் காண்பித்துள்ளனர்.

இதற்கிடையே, கோதுமை மாவின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது. இது, ஹோட்டல், பேக்கரிகளில் கடுமையான தாக்கத்தைச் செலுத்தும். அத்துடன், எரிபொருட்களின் விலைகளும் மீண்டும் அதிகரிக்கக்கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுமாயின், வீதிக்கு இறங்காமல் இருக்கின்ற மக்களும் வீதிக்கு இறங்கிவிடுவர்.

போஷாக்கான உணவை, ஒரு வேளையேனும் உட்கொள்ள முடியாவிடின், அடுத்தடுத்த கட்டங்களை நினைத்துக்கூட பார்க்கவே முடியாது. ஆகையால், வரிசைகளைக் குறைத்து, மக்களை வீதிக்கு இறங்கவிடாமல் தடுப்பது, அரசாங்கத்தின் கையிலேயே உள்ளது. அதற்கு நாட்டின் உண்மையான நிலைமையை பகிரங்கப்படுத்த வேண்டும்.

எந்தெந்த நாடுகளுக்கு எவ்வளவு கடன், வட்டியுடனான கடன்தொகை, கையிருப்பு, குறுகிய காலத்தில் கிடைக்கும் நிதியுதவி, கடன்தொகை உள்ளிட்ட விவரங்களை அறிவிக்கவேண்டும். அதனூடாக எவ்வளவு காலத்துக்குத் தாக்குப்பிடிப்போம் என்பதை, மக்கள் தீர்மானித்துக்கொள்வர்.

இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த 30 நாள்கள் சலுகை காலமும் நிறைவடைந்துவிட்டது. இந்நிலையில், அடுத்த மாதமளவில் 5.5 பில்லியன் டொலர்களை, கடனாகச் செலுத்த வேண்டி உள்ளதென ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். ஆக, நாடு கடுமையான வங்குரோத்து நிலைக்குள் விழுந்துவிட்டது என்பது மட்டுமே யதார்த்தமாகும். இதிலிருந்து மீண்டெழ, ஓரணியில் திரள்வதே சிறந்தது.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ரணிலின் மீள்வருகையும் சதியும்



புருஜோத்தமன் தங்கமயில்

ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராகி இருக்கிறார். கடந்த பொதுத் தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சி முழுமையாக தோற்கடிக்கப்பட்டது. அந்தக் கட்சி பெற்ற உதிரி வாக்குகளால் கிடைத்த ஒரேயொரு தேசிய பட்டியல் மூலமாக, 2021ஆம் ஆண்டு, ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்துக்கு வந்தார்.

ஐந்து முறை பிரதமர், நீண்ட காலமாக எதிர்க்கட்சித் தலைவர் போன்ற பதவிகளை வகித்த ரணில், தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்கு மீண்டும் வந்த போது, அதைப் பலரும் பரிதாபத்தோடு பார்த்தார்கள்.

ஆனால், ஒற்றைப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு, மூன்றில் இரண்டு அறுதிப் பெரும்பான்மைக்கு அண்மித்த வெற்றியைப் பெற்ற ராஜபக்ஷர்களின் பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் பிரதமராக, இன்று அவர் விளங்குகின்றார்.

தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு, அதுவும் தனி ஒருவராக இருந்து கொண்டு, இலங்கை அரசியலில் என்ன செய்துவிட முடியும் என்று, கடந்த ஆண்டு ரணிலிடம் கேட்கப்பட்ட போது, அவர் தனக்கு அதிர்ஷ்டம் இருப்பதாகக் கூறியிருந்தார். அப்போது, அது குறித்து யாரும் அலட்டிக் கொள்ளவில்லை.

> **ராஜபக்ஷர்களை முழுமையாக ஆட்சி அதிகார கட்டமைப்பில் இருந்து நீக்குவதன் மூலம், தென் இலங்கை மக்கள், ஆட்சிக் கட்டமைப்புக்குள் ஊழலற்ற, நேர்மையான இயக்கத்தைப் பேண விரும்பினார்கள். ஆனால், அந்த வாசல் திறப்பதற்கு முன்னர், ரணில் விக்கிரமசிங்க தடுப்புக்கட்டையாக வந்திருக்கிறார்**

ஆனால், இன்றைக்கு அவர் நம்பிய அதிர்ஷ்டம் பற்றிப் பலரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். யார் விரும்பினாலும் இல்லையென்றாலும், இன்னும் சில மாதங்களுக்கு ரணில் விக்கிரமசிங்க தான் நாட்டின் பிரதமர்.

ஆனால், பிரதமர் பதவியை ரணில் ஏற்றமை என்பது, 'ராஜபக்ஷர்களை வீட்டுக்கு விரட்டும்' போராட்டத்தின் இலக்கை, மழுங்கடிக்கச் செய்யும் செயற்பாடாகும். ஜனநாயகத்தின் அடிப்படை மக்களாவர். அவர்களின் உணர்வுகளையும் உரித்துகளையும் புறந்தள்ளிக் கொண்டு செய்யப்படும் அரசியல், அறம் சார்ந்தது அல்ல.

ரணில் விக்கிரமசிங்க இம்முறை பிரதமர் பதவியை ஏற்றமை, அறத்துக்கு அப்பாலான செயற்பாடு. குறிப்பாக, ராஜபக்ஷர்களைக் காக்கும் செயற்பாடு. ராஜபக்ஷர்களை முழுமையாக ஆட்சி அதிகார கட்டமைப்பில் இருந்து நீக்குவதன் மூலம், தென் இலங்கை மக்கள், ஆட்சிக் கட்டமைப்புக்குள் ஊழலற்ற, நேர்மையான இயக்கத்தைப் பேண விரும்பினார்கள். ஆனால், அந்த வாசல் திறப்பதற்கு முன்னர், ரணில் தடுப்புக்கட்டையாக வந்திருக்கிறார்.

"..முழுமையாக வீழ்ந்து போயிருக்கிற நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டி அமைப்பதற்காகவே, பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டேன். மாறாக, ஒரு தனி மனிதரையோ, ஒரு குடும்பத்தையோ காப்பாற்றுவதற்காக அல்ல…." என்று திங்கட்கிழமை (16) நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் போது, ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

ஆனால், முதல் நாள் ஆற்றிய உரைக்கு மாறாக, அடுத்த நாள் பாராளுமன்றத்தில் அவர் ராஜபக்ஷர்களின் ஏவலாளி மாதிரி, அவர்களைக் காக்க வந்தவர் மாதிரி செயற்பட்டார்.

ராஜபக்ஷர்களை வீட்டுக்கு விரட்டும் போராட்டத்தின் இலக்குகளில் ஒன்று, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதாகும். அதன் போக்கில், முதலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான குற்றப்பிரேரணையொன்றை பாராளுமன்றத்துக்கு கொண்டு வருவதன் மூலம், அவரைப் பதவி நீக்குவதற்கான ஏதுகைகளை ஏற்படுத்துவதாகும்.

அதற்காக எதிர்க்கட்சிகளின் பிரேரணையை எம்.ஏ. சுமந்திரன் தயாரித்து, போராட்டக்காரர்களின் ஒப்புதலோடு பாராளுமன்றத்தில் முன்வைத்தார். எதிர்க்கட்சியில் இருக்கும் போது, அந்தப் பிரேரணைக்கு தன்னுடைய ஆலோசனைகளை வழங்கிய ரணில், அந்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் எடுக்கப்படுவது தொடர்பில் இடம்பெற்ற பாராளுமன்ற வாக்கெடுப்பில், எதிராக வாக்களித்திருக்கிறார்.

அன்றைக்கு அவர் எதிர்க்கட்சி உறுப்பினர். இன்று அவர் ராஜபக்ஷர்களின் அரசாங்கத்தின் பிரதமர். அப்படிப்பட்ட நிலையில், அவர் எப்படி கோட்டாவை நீக்குவதற்கான பிரேரணைக்கு ஆதரவளிப்பார் என்கிற கேள்வி இயல்பானதுதான்.

ஆனால், கடந்த காலங்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிப்புக்கு எதிராகத் தொடர்ச்சியாகப் பேசி வந்திருக்கின்ற ரணில், அதற்கான வாய்ப்புக்கான சாத்தியப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்ற தருணத்தில், அதைத் தவிர்த்திருக்கின்றார். அதற்கு காரணம், பல தடவைகள் முயன்றும் அடைய முடியாமல் போன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியின் மீது, அவருக்கு இருக்கும் தீராத காதல்!

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக, மூன்று தசாப்த காலமாக அவர் இருந்த போதிலும், இரண்டு முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட போதிலும், அவரால் அந்தப் பதவியை அடைய முடியவில்லை. அதுவும், அவரது மாமாவான ஜே.ஆர். ஜெயவர்தன கொண்டுவந்த ஆட்சி முறையில் இருந்து, அதிகார கரங்களை நீட்ட வேண்டும் என்பது அவரது விருப்பம்.

கடந்த பொதுத் தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சி முழுவதுமாகத் தோற்றதோடு, அதற்கான வாய்ப்பு முழுமையாக இல்லாமல் போனது. ஆனால், ராஜபக்ஷர்களின் முறையற்ற ஆட்சியும் அவர்கள் இரண்டரை ஆண்டுகளுக்குள் ஏற்படுத்திவிட்ட பொருளாதார சீரழிவும், ரணிலுக்கான ஜனாதிபதி கனவை மீண்டும் ஏற்படுத்தி இருக்கின்றது.

இன்னொரு ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றால், அதில் ராஜபக்ஷர்கள் போட்டியிடுவதற்கான வாய்ப்புகள் இல்லை. அப்படிப் போட்டியிட்டாலும் அவர்கள் வெற்றிபெறும் வாய்ப்புகள் இல்லை. அப்படியான நிலையில், தனக்குக் கிடைத்துள்ள வாய்ப்பைப் பயன்படுத்தி, அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக, வெற்றியாளராகத் தன்னை முன்னிறுத்தும் வாய்ப்பையும் கருத்தில் கொண்டே, ரணில் பிரதமர் பதவியை ஏற்றிருக்கிறார்.

> **நாடு நெருக்கடியில் இருக்கும் போது, ஆட்சிப் பொறுப்பை ஏற்கத் தயங்குபவர்கள், எப்படி ஆளுமைமிக்க தலைவர்களாக இருப்பார்கள் என்கிற கேள்வியை சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்டவர்களை நோக்கி எழ வைப்பதற்கான வாய்ப்பாகவும், தான் ஏற்றிருக்கும் பிரதமர் பதவியை ரணில் பார்க்கிறார்**

நாடு சந்தித்துள்ள பாரிய பொருளாதார நெருக்கடியை, சிறிதாக மாற்றினாலே, நாட்டை மீளக்கட்டி அமைப்பதற்கான ஆளுமையாகத் தன்னை தென் இலங்கை மக்கள் நம்புவார்கள் என்று ரணில் நினைக்கிறார்.

நாடு நெருக்கடியில் இருக்கும் போது, ஆட்சிப் பொறுப்பை ஏற்கத் தயங்குபவர்கள், எப்படி ஆளுமைமிக்க தலைவர்களாக இருப்பார்கள் என்கிற கேள்வியை சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்டவர்களை நோக்கி எழ வைப்பதற்கான வாய்ப்பாகவும், தான் ஏற்றிருக்கும் பிரதமர் பதவியை ரணில் பார்க்கிறார்.

அப்படியான நிலையில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு ஆதரவளிக்கும் சஜித், அநுர உள்ளிட்டவர்களை, பிரதமர் பதவியை ஏற்க விடுவதற்கு ரணில் தயாரில்லை. ராஜபக்ஷர்களுக்கும் எதிர்க்கட்சிகளின் கைகளில் ஆட்சி செல்வது விருப்பமில்லை.

> **ராஜபக்ஷர்கள் – ரணில் என்ற இரண்டு தரப்புகளும், தங்களின் எதிர்கால ஆட்சி அதிகார வாய்ப்புகளைக் கருதித்தான் இணக்கத்துக்கு வந்துள்ளார்கள். இவ்வாறு ரணில், இந்த ஆள்மாறாட்ட ஆட்சிக்கு வந்தமையால்த்தான், அவர் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ராஜபக்ஷர்களைக் காக்கவும் முனைகிறார்**

அப்படியான நிலையில்தான், ரணிலும் ராஜபக்ஷர்களும் தங்களுக்கான எதிர்கால நலன்களைக் கருத்தில் கொண்டு, இவ்வாறான ஆட்சி அதிகார மாற்றத்துக்கான இணக்கத்துக்கு வந்திருக்கிறார்கள். ரணில் தன்னுடைய பதவி குறித்துத்தான் கவனமாக இருப்பார். அவருக்கு அவரின் கட்சியின் எதிர்கால வளர்ச்சியோ, அடுத்த கட்டத் தலைமைகளை தயார்படுத்துவதோ இலக்கில்லை.

அப்படியான நிலையில், அவரை இப்போது பிரதமர் பதவியில் இருத்துவதுதான் தங்களின் மீள்வருகைக்கான வாய்ப்புகளைத் தக்க வைக்கும் செயல் என்று ராஜபக்ஷர்கள் நினைக்கிறார்கள். ஏனெனில், சஜித்தோ அல்லது அநுரவோ ஆட்சிப் பொறுப்பை ஏற்றால், அவர்கள் ஆட்சியை மாத்திரமல்ல, கட்சி சார் நடவடிக்கைகளிலும் கவனமாக இயங்குவார்கள். அது, அவர்களை தோற்கடிப்பதற்கான சாத்தியங்களை கடினமாக்கும்.

இப்படி, ராஜபக்ஷர்கள் - ரணில் என்ற இரண்டு தரப்புகளும், தங்களின் எதிர்கால ஆட்சி அதிகார வாய்ப்புகளைக் கருதித்தான் இணக்கத்துக்கு வந்துள்ளார்கள். இவ்வாறு ரணில், இந்த ஆள்மாறாட்ட ஆட்சிக்கு வந்தமையால்த்தான், அவர் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ராஜபக்ஷர்களைக் காக்கவும் முனைகிறார்.

நாடு பொருளாதார ரீதியில் முழுமையாக முடங்கிவிட்டது. அதுதான், தென் இலங்கை மக்களை எழுச்சி கொள்ளவும் வைத்தது. அந்த எழுச்சி என்பது, பொருளாதார மீட்சி சார்ந்ததுதான். ஆனால், அது, ஆட்சி அதிகார, நிர்வாக கட்டமைப்புக்குள் இருக்கும் ஊழல், மோசடி, செயற்றிறன் இன்மை உள்ளிட்டவற்றுக்குத் எதிரானது.

இவற்றைச் சரி செய்வதற்கான வாய்ப்பு, ஒற்றை மனிதரிடம் முழு அதிகாரத்தையும் சேர்ப்பிக்கும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிப்போடு ஆரம்பிக்கலாம். ஆனால், அந்த வாய்ப்பினை ரணில் இல்லாமல் ஆக்கியிருக்கிறார். அது, போராடும் மக்களுக்கு எதிரானது.



## வாழ்வியல் தரிசனம்

சந்தோஷத்துடன் வருபவர்களையும் துன்பதுயரங்களுடன் வருபவர்களையும் நீங்கள் அடிக்கடி சந்தித்த வண்ணமாக இருந்திருப்பீர்கள்.

புன்னகையுடன் ஒருவர் உங்களைச் சந்திக்கும்போது, வழக்கம்போல "சுகமாக இருக்கின்றீர்களாக?" என்று கேட்பீர்கள். அவர்களும் "ஆமாம்! நல்ல சந்தோஷமாக இருக்கின்றோம்" என்றதும், "நல்லது! அப்படியே என்றும் மகிழ்ச்சியாக வாழுங்கள்" என்று கூறுவீர்கள். அதேசமயம் இன்னொருவர் உங்களைச் சந்திக்கும்போது, அவர் முகம் சுருங்கி கவலையுடன் காணப்படுவதை உற்றுநோக்கியவுடன், "ஏன், முகம் வாடியிருக்கிறீர்கள்?" எனக் கேட்டால், அவர் தனது கவலைகளைச் சொல்ல ஆரம்பிப்பார். நீங்கள் என்ன செய்வீர்கள்?

இந்தச் சந்தர்ப்பத்தில், அவர் சொல்வதை கவனமாகக் கேட்பீராக! ஒருவரை ஆறுதல்படுத்துவது மனிதாபிமானம். அதைவிடுத்து, அவரது தவறுகளை உடன் சுட்டிக்காட்டுவது நல்லதல்ல! ஒருவரின் மனக்குமுறல் அவருக்குத்தான் புரியும். அதைப் பொறுமையுடன் கேட்கவேண்டும்.

மனஆறுதலைப் பெற ஒருவர் தனக்குப் பிடித்தவரிடம் வருவார். அந்த நேரத்தில் புண்படுத்துமாறு பேசாமல், ஆறுதலூட்டுக! நல்ல அறிவுரைகளைப் பின்னர் கூறலாம். நிலைமையைப் புரிந்து பேசுக; பரிவுடன் அணுகுக!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### சாவகச்சேரி பொதுச்சந்தையில் அவலம்

சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்திலுள்ள பொது மலசல கூடத்தில் கழிவுநீர் நிரம்பி வழிவதால், மக்கள் பல்வேறு அசௌகரியங்களையும் சுகாதார சீர்கேடுகளையும் எதிர்கொள்கின்றார்கள் என விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுச் சந்தையில், மலசல கூடத்தின் கழிவு நீர் அகற்றப்படாமல் உள்ள காரணத்தாலேயே, மேலதிக கழிவுநீர் வடிந்து, வீதி மற்றும் சந்தையின் வெளிப்புறம் போன்ற மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளில் தேங்கி நிற்கின்றது.


இவ்வாறு தேங்கி நிற்கும் கழிவு நீரால் சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுவதுடன், இலையான், நுளம்பு பெருக்கத்துக்கும் காரணமாக அமைந்துவிடுகின்றது. குறிப்பாக, நாடு முழுவதும் டெங்கு நுளம்பு குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இச்சந்தர்ப்பத்தில், இவ்வாறு ஆரோக்கியத்துக்கும் கேடுவிளைவிக்கும் அசுத்த நீர், தேங்கி நிற்காதவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சாவகச்சேரி நகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட இந்தச் சந்தையில், பல்வேறு குறைபாடுகள் நிலவி வருகின்றபோதிலும், சந்தைக்கு பொருட்கள் கொள்வனவுக்காக வரும் பொதுமக்களும் அங்கு வியாபாரம் செய்யும் வியாபாரிகளும் சுகாதார ரீதியில் பாதிக்கப்படக்கூடிய இக்குறைபாட்டை உடனடியாக நீக்க, ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அசௌகரியத்துக்கு உள்ளாகும் பொதுமக்களால் வேண்டுகோள் முன்வைக்கப்படுகின்றது.

வீ. நேசரத்தினம்

சென்னை

# பேரறிவாளன் விடுதலை

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், பேரறிவாளனை விடுதலை செய்து, உச்சநீதிமன்றம் நேற்று (18) தீர்ப்பு வழங்கியது. உச்சநீதிமன்றம் தனக்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி, இவ்வாறு விடுதலை செய்துள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் எல் நாகேஸ்வர ராவ், போபண்ணா, பி.ஆர் கவாய் ஆகியோரே இத்தீர்ப்பை வழங்கியுள்ளனர். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, சிறையிலிருந்த போது, 2014 இல் பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரின் தூக்கு தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

இவர்களின் கருணை மனு அப்போது நிலுவையில் இருந்தது. நீண்ட காலம் கருணை மனு நிலுவையில் இருப்பது அநீதிக்கு சமமானது. தன்னை விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து பேரறிவாளன் 2016 இல் மனுத்தாக்கல் செய்து, அதன்பின் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார்.

தமிழ்நாடு அரசு இயற்றிய தீர்மானத்திற்கு ஆளுநர் ஒப்புதல் அளித்து, தன்னை விடுவிக்க வேண்டும் என்று அவர் மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ்நாடு அமைச்சரவையின் தீர்மானத்தை, தமிழ்நாடு ஆளுநர் ஏற்காமல் காலம் தாழ்த்தி வந்த நிலையில், பேரறிவாளவன் மனுதாக்கல் செய்தார். உச்ச நீதிமன்றத்தில் கடந்த சில வாரங்களாக வழக்கு விசாரணை நடந்து வந்த நிலையில், கடந்த 11 ஆம் திகதி விசாரணை முடிந்தது.

பேரறிவாளன் ஏற்கெனவே சிறையில் 30 வருடம் இருந்துவிட்டார். அவர் அங்கேயே படித்தும் விட்டார். அவரின் நடத்தையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நீங்கள் விடுதலை செய்யும் வரை காத்திருக்காமல் நாங்களே ஏன் விடுதலை செய்ய கூடாது? என்று உச்சநீதிமன்றம் மத்திய அரசுக்கும், தமிழ்நாடு ஆளுநருக்கும் கேள்விகளை எழுப்பியது. இந்த நிலையில் உச்சநீதிமன்றம் பேரறிவாளனை விடுதலை செய்வதாக தீர்ப்பு வழங்கியிருந்தது.

சென்னை

## 6 பேரின் விடுதலைக்கான ஆணையைப் பெறவும்



“பேரறிவாளன் விடுதலை குறித்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைச் சுட்டிக்காட்டி, 31 ஆண்டுகளாக சிறை தண்டனை அனுபவித்து வரும் நளினி, முருகன், ரவிச்சந்திரன், சாந்தன், ஜெயக்குமார், ரொபர்ட் பயஸ் ஆகிய 6 பேரின் விடுதலைக்கான ஆணையை உச்சநீதிமன்றத்திலிருந்து தமிழக அரசே பெற முடியும்” என்று பாட்டாளி மக்கள் கட்சியின் (பா.ம.க) நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

பேரறிவாளனின் விடுதலை மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. அதையும் கடந்து குரலற்றவர்களுக்கும் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு, மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. பேரறிவாளனின் சட்டபூர்வ விடுதலை, 2014ஆம் ஆண்டில் நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.



சென்னை

## தீர்ப்பை விமர்சிக்க விரும்பவில்லை

பேரறிவாளன் விடுதலையில், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை நாங்கள் விமர்சிக்க விரும்பவில்லை என காங்கிரஸ் கட்சியின் தலைவர் கே.எஸ். அழகிரி தெரிவித்துள்ளனர்.


முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை விவகாரத்தில், எழுவரையும் உச்சநீதிமன்றம் தான் கொலையாளிகள் என்று கூறி தண்டனை கொடுத்தது. அதே உச்சநீதிமன்றம் சில சட்ட நுணுக்கங்களைச் சொல்லி பேரறிவாளனை விடுதலை செய்திருக்கிறது.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை நாங்கள் விமர்சிக்க விரும்பவில்லை. அதேநேரத்தில், குற்றவாளிகள் கொலைகாரர்கள் என்பதையும், அவர்கள் நிரபராதிகள் அல்ல என்பதையும் நாங்கள் அழுத்தமாகக் கூற விரும்புகிறோம்' என்று பதிவிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து பேரறிவாளனை விடுதலை செய்து உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் ராகுல் காந்தியும் ஏற்றுக் கொள்வார்கள் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திருநாவுக்கரசர் தெரிவித்துள்ளார். நீதிமன்றத்தின் தீர்ப்பில் காங்கிரஸ் கட்சிக்கு மாற்று கருத்து இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை

## மகிழ்ச்சி தருகிறது



பேரறிவாளன் விடுதலை எல்லையற்ற மகிழ்ச்சியைத் தருகிறது என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் (ம.தி.மு.க) பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

மூன்று பேருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதற்கான நாள் குறித்து அறிவிப்பு வெளியானதைக் கேட்டு அதிர்ந்து போனேன். இந்தியாவின் தலைசிறந்த வழக்குரைஞர் ராம் ஜெத்மலானி அவர்களைத் தொடர்பு கொண்டு, சென்னைக்கு அழைத்து வந்து, உயர்நீதிமன்றத்தில் வாதாடச் செய்து, தண்டனையை நிறுத்தி வைத்து, தடை ஆணை பெற்றோம்.

அதற்குப் பின்னர், உச்சநீதிமன்ற மேல் முறையீட்டின் அனைத்து அமர்வுகளிலும், ராம் ஜெத்மலானி கலந்து கொண்டு அருமையான வாதங்களை எடுத்து வைத்தார். இந்த வழக்கில், அவருடைய வாதங்கள் முதன்மையானவை. அத்தனை அமர்வுகளிலும், அவருடன் நான் பங்கேற்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

சென்னை

## ஒரு தாயின் அறப்போர் வென்றது



பேரறிவாளன் விடுதலை குறித்து கருத்துரைத்த விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், ஒரு தாயின் அறப்போர் வென்றது என தெரிவித்துள்ளார்.

அற்புதம் அம்மாளின் உறுதிமிக்க, இடையறாத, சட்டவழியிலான நெடும்போருக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி. அனைத்து ஜனநாயக சக்திகளின் நல்லாதரவு, தமிழக அரசு நல்கிய ஒத்துழைப்பால் விளைந்த நீதி, உச்சநீதிமன்ற நீதிபதிகளின் நேர்மைத்திறத்துக்கு எமது பாராட்டுகள் என தெரிவித்துள்ளார்.



சென்னை

## வரலாற்று தீர்ப்பு

பேரறிவாளனை உச்சநீதிமன்றம் விடுதலை செய்தது வரலாற்றில் இடம்பெறத்தக்க தீர்ப்பு என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

31 ஆண்டுகள் சிறைவாசம் முடித்து, விடுதலைக் காற்றை சுவாசிக்கும் பேரறிவாளனுக்கு வாழ்த்தையும் வரவேற்பையும் தெரிவித்துக்கொள்கிறேன் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது நீதி - சட்டம் - அரசியல் - நிர்வாகவியல் வரலாற்றில் இடம்பெறத் தக்க தீர்ப்பு! தமிழ்நாடு அரசின் வாதங்களை முழுமையாக ஏற்று, இந்த இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

சென்னை

## நிமிர்ந்த தீர்ப்பு



இரும்புக் கம்பிகள் இளமையைத் தின்று தீர்த்தபிறகு, ஒரு மனிதன் வெளியே வருகிறான் என கவிஞர் வைரமுத்து தனது கவிதையில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டு அரசுக்கும் உச்ச நீதிமன்றத்துக்கும் வணக்கம். பேரறிவாளனுக்குத் திறந்த அதே வாசல் வழியே, சம்பந்தப்பட்ட ஏனையோரும் வெளிவருமாறு வெளிவர வேண்டும் நீதிமன்றத்தின் நிமிர்ந்த தீர்ப்பு எனவும் கூறினார்.





முள்ளிவாய்க்கால் முற்றம்

# கண்ணீரில் நனைந்தது





2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது, முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்ட தமிழின படுகொலையின் 13ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் மிகவும் உணர்வெழுச்சியுடன் நேற்று (18) அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட ஒருவர் பொதுச் சுடர் ஏற்றியதை தொடர்ந்து, ஏனைய உறவுகளும் சுடரேற்றி அக வணக்கம் செலுத்தி, மலர் தூவி, அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது, முள்ளிவாய்க்கால் பிரகடனமும் வெளியிடப்பட்டு, முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள், சண்முகம் தவசீலன்)




## காரைதீவில்...



முள்ளிவாய்க்கால் அவலத்தின் 13ஆவது நினைவேந்தல் நிகழ்வு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில், காரைதீவு பொதுச் சந்தை கட்டடத்துக்கு முன்னால் நேற்று (18) நடைபெற்றது.

(படங்கள்: சகா)




## மன்னாரில்...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில், மன்னார் பஜார் பகுதியில் நேற்று (18) நடைபெற்றது.

(படங்கள்: லெம்பர்ட்)




## திருகோணமலையில்...

திருகோணமலை அகதிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில், பள்ளத் தோட்டம், அன்னை வேளாங்கண்ணி வீதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி, முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்கள் நேற்று (18) நினைவு கூரப்பட்டார்கள்.

(படங்கள்: தீஷான் அஹமட்)



ரஷ்யா

# ரஷ்யாவுடன் கை கோர்த்த இந்தியா

இந்தியாவிற்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் 10ஆவது இடத்தில் இருந்த ரஷ்யா 4ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

உக்ரேன் மீது ரஷ்யா கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது. இதன் காரணமாக பல நாடுகள் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்றன.

இதையடுத்து இப் போரின் எதிரொலியாக, கச்சா எண்ணெயை சலுகை விலையில் பெரும் வாய்ப்பானது இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது.



அந்தவகையில் இந்தியாவிற்கு, கடந்த ஏப்ரல் மாதம் முதல், நாள் ஒன்றுக்கு 2,77,000 கொள்கலன்களாக கச்சா எண்ணெய் இறக்குமதியானது உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த மே மாதம் 4,87,500 கொள்கலன்களாக உயர்வடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

31 பேகர்களை

## ஓடர் செய்த குழந்தை



2 வயதுக் குழந்தை யொன்று தாய்க்குத் தெரியாமல் 31 சீஸ் பேர்கர்களை( Cheese burgers) ஓடர் செய்த சம்பவம் அமெரிக்காவில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் கிங்ஸ்வில்லே பகுதியைச் சேர்ந்தவர் கெல்சி புர்க்கால்டர் கோல்டன் இவரின் 2 வயதான மகனான பார்ரெட்டே இவ்வாறு 31 பேகர்களை ஓடர் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத் தினத்தன்று அக்குழந்தை தாயின் தொலைபேசியில் விளையாடிக் கொண்டிருந்ததாகவும், இதன்போது எதிர் பாராத விதமாக உணவு ஓடர் செய்யும் அப் (App) மூலம் மெக்டொனால்ஸ் கடையில் 31 சீஸ் பேகர்களை அக் குழந்தை ஓர்டர் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சிறிதுநேரத்தில் 31 சீஸ் பேர்கர்களுடன் ஊழியர் கெல்சி வீட்டுக்கு வந்தார் எனவும் இதனால் திகைத்த அவர் அவரது குழந்தையிடம் பொலைபேசியை வாங்கிப் பார்த்த போது அதில் அக்குழந்தை 31 பேர்கர்களை ஓடர் செய்துள்ளமையைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்

எனினும் மகன் மீது தனது கோபத்தை காட்டாமல் அந்த பேகர்களை மற்றவர்களுக்கு வழங்க முடிவு செய்தார் எனவும் இதையடுத்து பேஸ்புக் பக்கத்தில், என்னிடம் 31 சீஸ் பேகர்கள் இருக்கிறன. யாருக்கு விருப்பம் இருந்தால் இலவசமாக தருகிறேன். எனது 2 வயது மகன் எப்படி ஓர்டர் செய்ய வேண்டும் என்பதை நன்கு அறிந்து வைத்து இருக்கிறான் என்று " பதிவிட்டுள்ளார்.

இதனையடுத்து அவரது வீட்டுக்கு பவர் வந்து குறித் பேகர்களை வங்கிச் சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா



## ஒலியின் வேகத்துடன் அமெரிக்கா போட்டி

ஒலியின் வேகத்தை விட 5 மடங்கு அதிக வேகத்தில் செல்லும் ஹைப்பர்சோனிக் ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளதாக அமெரிக்க விமானப்படை அறிவித்துள்ளது.

அண்மையில் தெற்கு கலிபோர்னியா கடற்பகுதியில், பி-52 பாம்பர் ரக விமானத்தில் இருந்து குறித்த ஏவுகணை சோதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானத்திலிருந்து அதனை ஏவியதைத் தொடர்ந்து, திட்டமிட்டபடி அதன் பூஸ்டர் இயங்கி, ஒலியை விட ஐந்து மடங்கு அதிகமான வேகத்தில் பாய்ந்து சென்றதாக விமானப்படை குறிப்பிட்டுள்ளது.

தாங்கள் மட்டுமே ஹைப்பர் சோனிக் ஆயுதங்களை உருவாக்குவதில்லை என கூறிய அமெரிக்க இராணுவ அதிகாரிகள், ரஷ்யா அந்த ஆயுதத்தை உக்ரேனில் பயன்படுத்தியதாகவும், சீனாவும் அதனை பரிசோதித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கா

## அளவில்லா விடுமுறை வழங்கும் நிறுவனம்

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல முதலீட்டு நிறுவனமான கோல்ட்மேன் சாக்ஸ் (Goldman sachs)என்ற நிறுவனம் தனது சிரேஷ்ட ஊழியர்களுக்கு அளவில்லா விடுமுறைகளை வழங்கவுள்ளதா அறிவித்துள்ளது.




இது ஊழியர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக அமெரிக்காவில் பல நிறுவனங்களில் இருந்து பெரும்பாலான ஊழியர்கள் இராஜினாமா செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஊழியர்கள், இராஜினாமா செய்வதைத் தடுக்கும் வகையிலும், திறமையானவர்களைத் தக்க வைத்துக் கொள்ளும் நோக்கத்திலும் நிறுவனங்கள் சம்பள உயர்வு, போனஸ் மற்றும் விடுமுறை என பல்வேறு சலுகைகளை வழங்கி வருகின்றன.

அந்த வகையில் தற்போது "கோல்ட்மேன் சாக்ஸ்" என்ற நிறுவனமும் தனது சிரேஷ்ட ஊழியர்கள் அனைவருக்கும் அளவில்லா விடுமுறை வழங்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஏனைய ஊழியர்களுக்கான விடுமுறைக்கு வரம்பு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஏனைய ஊழியர்களுக்கு வருடத்திற்கு இரண்டு நாட்களாக கூடுதல் விடுமுறை வழங்கப்படும் எனவும் 2023 ஆம் ஆண்டு முதல் அனைத்து ஊழியர்களும் வருடத்திற்கு மூன்று வாரங்கள் விடுமுறை எடுக்க வேண்டுமென இந்நிறுவனம் முடிவு செய்துள்ளது.

குறிப்பாக மூன்று வாரங்களில் ஏதாவது ஒரு வாரம் இடைவிடாமல் முழு வாரமும் அதாவது ஏழு நாட்கள் தொடர்ந்து விடுமுறை எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊ ழியர்களின் உடல்நலம் மற்றும் மனநலம் பாதிக்கப்படுவதைக் கருத்தில் கொண்ட இந்நிறுவனம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்



## காட்டு தீயில் டிக்டொக்

### சர்ச்சையில் சிக்கிய பிரபலம்

பாகிஸ்தானைச் சேர்ந்த டிக்டொக் பிரபலம் ஹூமைரா அஸ்கர். பிரபல மொடல் நடிகையான இவர் வீடியோக்களில் நடித்து அதனை டிக்டொக் வலைதளத்தில் வெளியிட்டு வருகிறார்.

மேலும் அவரை 1.10 கோடி பேர் பின் தொடர்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஹூமைரா அஸ்கர், காட்டுத்தீ முன்பாக நின்று டிக்டொக் வீடியோ எடுத்து வெளியிட்டதால் சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

குறித்த வீடியோவில் காட்டுத்தீ பற்றி எரியும்போது, அதற்கு முன்னால் ஹூமைரா அஸ்கர் ஒய்யாரமாக நடந்து செல்கிறார்.

அந்த வீடியோவை 'நான் எங்கிருந்தாலும் நெருப்பு வெடிக்கும்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார்.

இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வேகமாக பரவியது. இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. அவருக்கு பலர் கண்டனம் தெரிவித்து வருகிறார்கள்.

இஸ்லாமாபாத் வனவிலங்கு மேலாண்மை வாரிய தலைவர் ரினா சயீத்கான் கூறும்போது, கவர்ச்சிகரமான வீடியோ எடுப்பதற்கு பதிலாக அவர் (ஹூமைரா அஸ்கர்) தீயை அணைப்பதற்காக ஒரு வாளி தண்ணீரை வைத்திருக்க வேண்டும்.

இந்த வீடியோக்கள் சொல்லும் செய்தி மிகவும் ஆபத்தானது. அதை கட்டுப்படுத்த வேண்டும். அவுஸ்திரேலியாவில் காட்டுத்தீயை ஏற்படுத்துபவர்களுக்கு வாழ்நாள் சிறை தண்டனை விதிக்கப்படுகிறது. அதுபோன்ற சட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

இலங்கை எதிர் பங்களாதேஷ்:

# வெற்றி தோல்வியற்று பயணிக்கிறது முதலாவது டெஸ்ட்

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையே சட்டோகிராமில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த முதலாவது டெஸ்ட்டானது வெற்றி தோல்வியற்ற முடிவை நோக்கி பயணிக்கிறது.



நேற்றைய நான்காம் நாளை, தமது முதலாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுகளை இழந்து 318 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த பங்களாதேஷ் ஆனது முஷ்பிக்கூர் ரஹீம், லிட்டன் தாஸின் இணைப்பாட்டத்தில் இனிங்ஸை நகர்த்திய நிலையில், 88 ஓட்டங்களுடன் கசுன் ராஜிதவிடம் தாஸ் வீழ்ந்ததோடு, வந்த தமிம் இக்பாலும் உடனேயே 133 ஓட்டங்களுடன் ராஜிதவிடம் வீழ்ந்தார்.

பின்னர் ஷகிப் அல் ஹஸனும், ரஹீமும் இனிங்ஸை நகர்த்திய நிலையில், 26 ஓட்டங்களுடன் அசித பெர்னாண்டோவிடம் அல் ஹஸன் வீழ்ந்ததுடன், ரஹீமும் 105 ஓட்டங்களுடன் லசித் எம்புல்தெனியவிடம் வீழ்ந்தார். அடுத்து நயீம் ஹஸன் தனஞ்சய டி சில்வாவிடம் வீழ்ந்ததோடு, 20 ஓட்டங்களுடன் தஜியுல் இஸ்லாமும் அசித பெர்னாண்டோவிடம் வீழ்ந்தார். ஷொரிஃபுல் இஸ்லாமால் துடுப்பெடுத்தாட முடியாமல் போக சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 465 ஓட்டங்களை பங்களாதேஷ் பெற்றது.

பதிலுக்கு, தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை நேற்றைய நான்காம் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில் அணித்தலைவர் டிமுத் கருணாரத்ன 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளார். பந்துவீச்சில், தஜியுல் இஸ்லாம் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தார்.

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 397/10 (துடுப்பாட்டம்: அஞ்சலோ மத்தியூஸ் 199, தினேஷ் சந்திமால் 66, குசல் மென்டிஸ் 54, ஒஷாத பெர்னாண்டோ 36 ஓட்டங்கள். பந்துவீச்சு: நயீம் ஹஸன் 6/105, ஷகிப் அல் ஹஸன் 3/60, தஜியுல் இஸ்லாம் 1/107)

பங்களாதேஷ்: 465/10 (துடுப்பாட்டம்: தமிம் இக்பால் 133, முஷ்பிக்கூர் ரஹீம் 105, லிட்டன் தாஸ் 88, மஹ்முடுல் ஹஸன் ஜோய் 58, ஷகிப் அல் ஹஸன் 26, தஜியுல் இஸ்லாம் 20 ஓட்டங்கள். பந்துவீச்சு: கசுன் ராஜித 4/60, அசித பெர்னாண்டோ 3/72, தனஞ்சய டி சில்வா 1/48, லசித் எம்புல்தெனிய 1/104)

இலங்கை: 39/2 (பந்துவீச்சு: தஜியுல் இஸ்லாம் 1/0)




## இங்கிலாந்துக் குழாமில் மீண்டும் அன்டர்சன், ப்ரோட்

நியூசிலாந்துக்கெதிரான முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளுக்கான இங்கிலாந்துக் குழாமில் ஜேம்ஸ் அன்டர்சன், ஸ்டுவர்ட் ப்ரோட் ஆகியோர் மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

முதற்தடவையாக குழாமில் துடுப்பாட்டவீரர் ஹரி ப்ரூக், வேகப்பந்துவீச்சாளர் மற்றி பொட்ஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

குழாம்: பென் ஸ்டோக்ஸ், ஜேம்ஸ் அன்டர்சன், ஜொனி பெயர்ஸ்டோ, ஸ்டுவர்ட் ப்ரோட், ஹரி ப்ரூக், ஸக் குறொலி, பென் போக்ஸ், ஜக் லீச், அலெக்ஸ் லீஸ், கிறெய்க் ஒவெர்ட்டன், மத்தியூ பொட்ஸ், ஒலி போப், ஜோ றூட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.



மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான

## இங்கிலாந்தின் பயிற்சியாளராக ஆஸி பெண்களின் பயிற்றுவிப்பாளர்

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான தமது புதிய பயிற்சியாளராக, அவுஸ்திரேலிய பெண்கள் அணியின் பயிற்றுவிப்பாளரான மத்தியு மொட்டை நான்காண்டுகள் ஒப்பந்தமொன்றில் இங்கிலாந்து பெயரிட்டுள்ளது.

மொட்டின் தலைமையின் கீழ் ஆஷஸ், இருபதுக்கு 20 உலகக் கிண்ணம், 50 ஓவர் உலகக் கிண்ணங்களை அவுஸ்திரேலியா வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு மண்முனை மேற்கு கோட்ட மெய்வல்லுநர் போட்டி

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு மண்முனை மேற்கு கோட்ட மட்ட மெய்வல்லுநர் திறனாய்வு 2022ஆம் ஆண்டுக்கான போட்டி நிகழ்வுகள் மட்டக்களப்பு மண்முனை மேற்கு நாவற்காடு நாமகள் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில், முதலாமிடத்தை மகிழவெட்டு வான் வித்தியாலயமும், இரண்டாமிடத்தை கன்னங்குடா மகா வித்தியாலயமும், மூன்றாமிடத்தை நாவக்காடு நாமகள் வித்தியாலயமும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஐ.பி.எல்:

## மும்பையை வென்ற சன்றைசர்ஸ்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் சன்றைசர்ஸ் ஹைதராபாத் வென்றது.



இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட சன்றைசர்ஸ், ராகுல் ட்ரிபாதியின் 76 (44), பிரியம் கர்க்கின் 42 (26), நிக்கலஸ் பூரானின் 38 (22) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ரமண்டீப் சிங்க் 3-0-20-3, ஜஸ்பிரிட் பும்ரா 4-0-32-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 194 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மும்பை, அணித்தலைவர் றோஹித் ஷர்மாவின் 48 (36), இஷன் கிஷனின் 43 (34) ஓட்டங்களின் மூலம் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றதுடன், டிம் டேவிட்டின் 46 (18), ரமண்டீப் சிங்கின் ஆட்டமிழக்காத 14 (06) ஓட்டங்களுடன் போராடியபோதும் வொஷிங்டன் சுந்தர், உம்ரான் மலிக் (3), புவ்னேஷ்வர் குமாரிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 190 ஓட்டங்களையே பெற்று மூன்று ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ராகுல் ட்ரிபாதி தெரிவானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 19 மே 2022, இல. 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.